
# சோதிட மலர்

## SOTHIDA MALAR



**உள்ளே.........**


* இலங்கையின் வருங்காலம் எப்படி?
* காதலில் வெற்றி உண்டா?
* எண்சோதிடத்தில் எண் 8
* சோதிடம் கற்போம்
* எண்சோதிட முரண்பாடுகள்
* குறுக்கெழுத்துப் போட்டி

இன்னும் பல


ரக்தாக்ஷி ஸ்ரீ ஐப்பசி மீ (17-10-84 — 15-11-84) ரூபா: 3-00

சரணுகத மாதுர மாதிஜிதம்
கருணுகர காமத காமஹதம்
சரகாநத சம்பவ சாருருசே
பரிபாலய தாரக மாரகமாம்

ஸ்ரீ வல்லீரமணுயாத ஸ்ரீ குமாராய மங்களம்
ஸ்ரீ தேவசேனு காந்தாய ஸ்ரீ விசாகாய மங்களம்

o o o

* உயிர்களின் விருப்பத்தை அறிபவன் ஈஸ்வரன். அவரவர்கள் வணங்கும் தெய்வத்தின் வாயிலாக இவ்விறைவனே வேண்டிய செல்வங்களை அவரவர்களுக்கு வழங்குகிருன்.

* முற்றுமுணர்ந்தவனை, பழைமையானவனை, அனைத்தையும் ஆள்பவனை, அணுவுக்கும் நுண்மையனை, அனைத்தையும் தாங்குபவனை, சிந்தனைக்கெட்டாத வடிவினனை, கதிரவனைப் போன்று விளங்குபவனை, அஞ்ஞான இருளுக்கப்பாற்பட்டவனை, பக்தியோடும், திட மனத்தோடும், யோக பலத்தோடும் புருவ மத்தியில் பிராணன் முழுவதையும் வைத்து, மரண காலத்தில் நினைப்பவனே இத் திவ்ய பரம புருஷனை அடையும் பாக்யத்தைப் பெறுகிருன்.

* தன் மனதை ஏமாற்ருத ஒருவனே பகவானது சந்நிதானத்தை அடைய முடியும். கபடமற்ற தன்மையும், உண்மையான அன்பும் இறைவனை அடையும் சிறந்த வழிகளாகும்.

o o o

## ஓங்கார ரூபம்

ஆகாசம் என்பதன் ஸ்வரூபம் சப்தம். ஓசைக்கு முதற் காரணம் சப்தம். இச் சப்தமே ஒலியாகும். ஒலியானது பேச்சுக்குரியதாக மாறும் போது அது பாஷையாகின்றது. ஓங்காரம் என்பது பாஷைகளுக்கு பீஜம் (விதை) போன்றது. எங்கள் வேதங்களிலும் பீஜ மந்திரமாயிருப்பது ஓங்காரம். இது சப்தப் பிரம்பம் என அழைக்கப் படுகின்றது. ஓசையின் துணையில்லாவிடில் சாஸ்திரங்களும் ஞானங்களும் மறைந்து போய் விடும். பரம்பொருளே நாத (சப்த) வடிவெடுத்து தன்னை ஓங்காரமாக எப்போதும் எல்லோர் மனதிலும் கிரியைகளிலும் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்ருர். ஓமெனும் பிரணவத்துள் பொருளாக விளங்குபவரும் இப் பரம்பொருளே.

உ


# சோதிடமலர்

SOTHIDA MALAR

சோதிட மாத சஞ்சிகை

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

ரக்தாக்ஷி ஸு ஐப்பசி மீ
( 17 - 10 - 84 )

மலர் 7 | இதழ் 7


## உள்ளே......................


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நாள் எப்படி? ... | 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் ... | 4 |
| 3 | ஐப்பசி மாதக் கிரகநிலை ... | 5 |
| 4 | கால ஹோரைகள் ... | 6 |
| 5 | ஐப்பசிமாத வானியற்காட்சி ... | 7 |
| 6 | சோதிடம் கற்போம் ... | 8 |
| 7 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? ... | 9 |
| 8 | அதிஷ்ட எண் ஞானம் ... | 17 |
| 9 | கிரகங்களின் அறுசுவைகள் ... | 19 |
| 10 | எண்சோதிடத்தில் எண் 8 ... | 20 |
| 11 | காதலில் வெற்றி உண்டா? ... | 22 |
| 12 | அன்னையைக் கண்டேன் ... | 23 |
| 13 | சந்தேக நிவிர்த்தி ... | 25 |
| 14 | எண்சோதிட முரண்பாடுகள் ... | 27 |
| 15 | ஆய்வு மன்றம் ... | 29 |
| 16 | குறுக்கெழுத்துப் போட்டி ... | 32 |

ஐப் 1 புத (17-10-84) ஸப்தமி பகல் 3-05 வரை, திருவாதிரை காலை 6-48, சித்தம். அவசிய கருமங்களை பகல் 3-05க்கு முன் செய்யலாம்.
ராகு 12-02 — 1-32

ஐப் 2 வியா (18-10-84) அஷ்டமி பகல் 2-13 வரை புனர்பூசம் காலை 6-50 வரை, அமிர்தசித்தம். அசுபதினம். ராகு 1-32—3-02

ஐப் 3 வெள் (19-10-84) நவமி பகல் 12-39 வரை பூசம் காலை 6-10 வரை, ஆயிலியம் பி. இ. 4-50 வரை, மரணம். சுபதினமன்று.
ராகு 10-32 —12-02

ஐப் 4 சனி (20-10-84) தசமி பகல் 10·26 வரை, மகம் பி. இ. 2-55 வரை, அமிர்தசித்தம். விவாகம் முதலிய சுபகருமங்கள் செய்யலாம்.
ராகு 9-02 — 10-32

ஐப் 5 ஞாயி (21-10-84) ஏகாதசி காலை 7-38 வ. துவாதசி பி. இ. 4-28 வரை, பூரம் பி. இ. 12-32வ.

# நாள் எப்படி?

சித்தாமிர்தம். ஸர்வ ஏகாதசி விரதம்,
ராகு 4-32 — 6-02

ஐப் 6 திங் (221084) திரயோதசி பி. இ. 12-54 வ. உத்தரம் இரவு 9-50 வரை, சித்தம், பிரதோஷம், இரவு நரகசதுர்த்தசி ஸ்நானம். சுபகருமங்கள் யாவும் செய்யலாம்.
ராகு 732 — 9;02

ஐப் 7 செவ் (23-10-84) சதுர்த்தசி இரவு 9-15 வ. அத்தம் மாலை 6-58 வரை, சித்தம், தீபாவளி. சுபகருமங்கள் செய்ய நன்றல்ல.
ராகு 3-02 — 4-32

ஐம் 8 புத (24-10-84) அமாவாசை மாலை 5-39 வ. சித்திரை மாலை 4-07 வரை, சித்தம். அமாவாசை, கேதாரகௌரி விரதம். இத்தினத்தில் பெண்கள் நோன்பிருந்து அம்மை அப்பரை வழிபடுவதால் நீண்ட மங்கல வாழ்வைப் பெறுவர்.
ராகு 12-02—1-32

ஐப் 9 வியா (25-10-84) பிரதமை பகல்2-16 வரை, சுவாதி பகல் 1-30 வரை, அமிர்த சித்தம் ஸ்கந்த ஷஷ்டி ஆ[illegible]பம். சுபகருமங்கள் செய்வதற்கு ஏற்ற தினம். ராகு 1-32 — 3-02

ஐப் 10 வெ (26-10-84) துவிதியை பகல் 11-15 வ. விசாகம் பகல் 11-13 வரை, மரணம் அசுபதினம்.
ராகு 10-33 — 12-03

ஐப் 11 சனி (27-10-84) திரிதியை காலை 8-47 வரை அனுஷம் காலை 9-29 வரை, சித்தம், சதுர்த்திவிரதம் சுபகருமங்கட்கு சிறந்ததல்ல. ராகு 9-03 — 10-33

ஐப் 12 ஞாயி (28-10-84) சதுர்த்தி காலை 6-58 வ. பஞ்சமி பி. இ 5-53 வரை, கேட்டை மரணம் காலை 8-24 வரை, மரணம் அசுபதினம்.

ஐப் 13 திங் (29-10-84) ஷஷ்டி பி. இ 5-36 வரை, மூலம், சித்தம் காலை 8-03 வரை, ஸ்கந்தஷஷ்டி விரதம் சுபதினமன்று ராகு 7-33 — 9-03

ஐப் 14 செவ் (30-10-84) ஸப்தமி முழுவதும், பூராடம் காலை 8-29 வரை, மரணம் அசுபதினம்
ராகு 3-03 — 4-33

ஐப் 15 புத (31-10-84) ஸப்தமி காலை 6-07 வரை உத்தராடம் பகல் 9-41 வரை, அமிர்த சித்தம் சுபகருமங்கட்கு உகந்த தினமன்று.
ராகு 12-03 — 1-33

ஐப் 16 வியா (1-11-84) அஷ்டமி - மரணம் காலை 7-20 வரை, திருவோணம் பகல் 11-32 வ. அசுபதினம். ராகு 1-34 — 3-04

ஐப் 17 வெள் (2-11-84) நவமி-சித்தம் பகல் 9-10வ. அவிட்டம் - மரணம் பகல் 1-57 வரை, பகல் 1-57 இன் மேல் சுபகருமங்கள் செய்யலாம்.
ராகு 10-34 – 12-04

ஐப் 18 சனி (3-11-83) தசமி - சித்தம் பகல் 11-25 வரை, சதயம் மாலை 4-44 வரை, பகல் 11-25 வரை அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 9-04 –10-34

ஐப் 19 ஞாயி (4-11-84) ஏகாதசி பகல் 1-54 வரை, பூரட்டாதி இரவு 7-42 வரை, சித்தாமிர்தம் ஸர்வ ஏகாதசிவிரதம். சுபதினமன்று. ராகு 4-34—6-04

ஐப் 20 திங் (5-11-84) துவாதசி மாலை 4-28 வரை, உத்தரட்டாதி இரவு 10-44 வரை, சித்தம் கரிநாள் சுபகருமங்கட்கு நன்று. ராகு 7-35 — 9-05

ஐப் 21 செவ் (6-11-84) திரயோதசி இரவு 6-57வ. ரேவதி இரவு 1-38 வரை, அமிர்தசித்தம், பிரதோஷ விரதம் தோட்டச் செய்கைகள் செய்ய நன்று.
ராகு 3-05 — 4-35

ஐப் 22 புத (7-10-84) சதுர்த்தசி இரவு 6-41 வரை அசுவினி-மரணம் பி. இ. 4-19 வரை, அசுபதினம்
ராகு 12-05 — 1-35

ஐப் 23 வியா (8-10-84) பூரணை இரவு 11-14 வ. பரணி - சித்தம் முழுவதும், பூரணை விரதம். சுப தினமல்ல. ராகு 1-35—3-05

ஐப் 24 வெள் (9-10-84) பிரதமை பி. இ. 12-52 வ. பரணி காலை 6-43 வரை, சித்தம், கார்த்திகை. ராகு 10-35—12-05

ஐப் 25 சனி (10-10-84) துவிதியை பி. இ. 2-06 வ. கார்த்திகை காலை 8-45 வரை, அமிர்தசித்தம், காலை 8-45 இன் மேல் சுபகருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 9-06 – 10-36

ஐப் 26 ஞா (11-10-84) திரிதியை-சித்தம் பி. இ. 2-54 வரை, ரோகிணி பகல் 10-24 வரை, சுபகருமங்கட்கு நன்று. ராகு 4-36 – 6-06

ஐப் 27 திங் (12-11-84) சதுர்த்தி பி.இ. 3-14 வரை, மிருகசீரிடம் பகல் 11-36 வரை, அமிர்தசித்தம், சுபகருமங்கட்கு நன்றல்ல; ராகு 7-37—9-07

ஐப் 28 செவ் (1311-84) பஞ்சமி பி. இ. 305 வரை, திருவாதிரை - மரணம் பகல் 12-21 வரை, பகல் 12-21 இன் மேல் வயல், தோட்டச் செய்கைகள் செய்ய நன்று. ராகு 3-07—4-37

ஐப் 29 புத (14-11-84) ஷஷ்டி இரவு 2-26 வரை, புனர்பூசம் பகல் 12-38 வரை வரை, சித்தம், சுப கருமங்களைச் செய்யலாம். ராகு 12-07—1-37

ஐப் 30 வியா (15-10-84) ஸப்தமி இரவு 1-16 வ. பூசம் பகல் 12-24 வரை, அமிர்தசித்தம், சுபகருமங்கட்கு உகந்த தினம். ராகு 1-37 — 3-07

---

இம்மாத விசேடம்

## ஸ்கந்தசஷ்டி விரதம்

ஐப்பசிமாத சுக்லபக்ஷப் பிரதமை முதல் சஷ்டி வரையுள்ள தினங்களில் தூயதோர் மறைகளாலும் துதித்திடத்தற்கரிய செவ்வேற்பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதமாகும்.

தேவர்கள் துயர்தீர்க்கும் பொருட்டு ஸ்கந்தப்பெருமான் சூரனோடு போர்தொடங்கி ஐப்பசி மாத ஷஷ்டித் திதியில் மாலைவேளையில் சூரனை வேலாயுதத்தால் கொன்றார். சாகாவரம் பெற்ற அச்சூரனுடைய உயிர் சேவலும் மயிலுமாக மாறி இப்பெருமானின் கொடியாயும் வாகனமாயும் உருவெடுத்தது. சூரனற் துயருற்ற தேவர் முதலானோர் அவ்வாறு தினங்களும் பெருமானைப் போற்றித் துதித்து நற்பேறடைந்தனர் என புராணங்கள் கூறுகின்றன. மானிடராகிய நாமும் இவ்வாறு தினங்களும் உபவாசமிருந்து முருகன் புகழ் மாலைகளைப் பாராயணம் செய்து அவரின் புராணங்களின் புகழ்ச்சிகளைக் கேட்டும் நற்பேறடைவோமாக! இம்மாதம் 9-ம் திகதி (பிரதமையன்று) தொடங்கி ஷஷ்டியிலன்று 5-ம் நாளாக இருந்தபோதிலும் சஷ்டிவிரதமனுட்டிப்பதே சாஸ்திர ரீதியாகும். இத்தினங்களில் அடியார்கள் யாபேரும்

காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேரமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தசஷ்டி கவசம் இதனை

சிந்தைகலங்காது தியானிப்பதனால் நவகோள் நயந்து நன்மையளித்திடும்; நவமதனெனவும் நல்லெழில் பெறுவர். எந்நாளும் ஈரெட்டாய் (பதினாறும் பெற்றவராய்) பெருவாழ்வு பெறுவர்.

## தீபாவளித் திருநாள்

தீபாவளியன்று கண்ணபிரான், உலகத்தை நரகமாக்கித் துன்புறுத்தி வந்த நரகாசுரனை அழிக்க முற்பட்டபோது கண்ணன் திருவருளால் சிறிது ஞானம் வரப்பெற்றவனாய் 'எனது மரணத்திற்காக யாரும் கலங்கவேண்டாம். எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து கங்கா ஸ்நா பலனுடன் கண்ணன் அருளால் நான்பெற்ற விடுதலையைக் கொண்டாட வேண்டும் எனக் கண்ணபிரானிடம் வேண்டிக் கொண்டானும். இதை யொட்டியே அதிகாலையில் ஐப்பசிமாத கிருஷ்ண பக்ஷச் சதுர்த்தசி கூடியுள்ள காலத்தில் நரக சதுர்த்தசி ஸ்நானம் செய்து பின் புத்தாடை புனைந்து சிறுவர்களும், பெரியோர்களும் பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள். தீப+ஆவளி (தீப வரிசை) தீபாவளி என்றிருந்த போதிலும் தீபங்கள் புறஇருளைப் போக்குவதாயும், மகிழ்ச்சி, இன்பம், உற்சாகம், ஆவல் இவை கூடிய உள்ளத்தில் ஸ்நானம் செய்து அழுக்ககற்றி புத்தாடை புனைந்து இறையருள் பெற்று இருளை நீக்குவதாயும், இருப்பதாலேயே தீபாவளித் தினத்தில் மனம் மகிழ்வதற்காக இவ்வித நிகழ்ச்சிகளைப் பண்டிகைகளில் பெரியோர்கள் வகுத்துள்ளனர் போலும்.

இம்மாதம் 7-ம் திகதி கொண்டாடப்படும் இத் தீபாவளிப் பண்டிகையில் முதனாள் இரவு சதுர்த்தசி கூடியுள்ள அதிகாலை நேரத்தில் எண்ணெய் ஸ்நானம் செய்து பண்டிகையின் விசேடம் கருதி செவ்வாய்க் கிழமையாயிருந்த போதிலும் கோடி வஸ்திரத்தில் மஞ்சள் குங்குமமிட்டு வீட்டில் தீபத்தின் முன் வைத்து லக்ஷ்மி தேவியைப் பிரார்த்தித்து மனைவி மக்களுடன் புத்தாடைகளை அணிந்து இறையருள் பெற்று வாழ்வீர்களாக!

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)


ரக்தாக்ஷி ஸ்ரீ ஐப்பசி மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (17-10-84 முதல் 15-11-84 வரை)

| இங் அக் | தமி ஐப்ப | வாரம் | துலாம் ம.மி. முதல் (காலே) | துலாம் ம.மி. வரை | விருச்சி ம. மி. வரை (காலே) | தனுசு ம. மி. வரை (பகல்) | மகரம் ம. மி. வரை (பகல்) | கும்பம் ம. மி. வரை (பி.ப) | மீனம் ம. மி. வரை (மாலே) | மேடம் ம. மி. வரை (இரவு) | இடபம் ம. மி. வரை (இரவு) | மிதுன ம. மி. வரை (இரவு) | கடகம் ம. மி. வரை (பி.இ) | சிங்கம் ம. மி. வரை (பி.இ) | கன்னி ம. மி. வரை) (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | புத | 6 03 | 8 05 | 10 16 | 12 24 | 2 20 | 4 04 | 5 47 | 7 36 | 9 39 | 11 50 | 1 58 | 3 58 | 5 57 |
| 18 | 2 | வியா | 5 57 | 8 01 | 10 12 | 12 20 | 2 16 | 4 00 | 5 43 | 7 32 | 9 35 | 11 46 | 1 54 | 3 54 | 5 53 |
| 19 | 3 | வெள் | 5 53 | 7 57 | 10 08 | 12 16 | 2 10 | 3 56 | 5 39 | 7 28 | 9 31 | 11 42 | 1 50 | 3 50 | 5 49 |
| 20 | 4 | சனி | 5 49 | 7 53 | 10 04 | 12 12 | 2 06 | 3 52 | 5 35 | 7 24 | 9 27 | 11 38 | 1 46 | 3 46 | 5 45 |
| 21 | 5 | ஞாயி | 5 46 | 7 49 | 10 00 | 12 08 | 2 02 | 3 48 | 5 31 | 7 20 | 9 23 | 11 34 | 1 42 | 3 42 | 5 41 |
| 22 | 6 | திங் | 5 42 | 7 44 | 9 55 | 12 03 | 1 57 | 3 43 | 5 26 | 7 15 | 9 18 | 11 29 | 1 37 | 3 37 | 5 36 |
| 23 | 7 | செவ் | 5 37 | 7 40 | 9 51 | 11 59 | 1 53 | 3 39 | 5 22 | 7 11 | 9 14 | 11 25 | 1 33 | 3 33 | 5 32 |
| 24 | 8 | புதன் | 5 33 | 7 36 | 9 47 | 11 55 | 1 49 | 3 35 | 5 18 | 7 07 | 9 10 | 11 21 | 1 29 | 3 29 | 5 28 |
| 25 | 9 | வியா | 5 29 | 7 32 | 9 43 | 11 51 | 1 45 | 3 31 | 5 14 | 7 03 | 9 06 | 11 17 | 1 25 | 3 25 | 5 24 |
| 26 | 10 | வெள் | 5 24 | 7 28 | 9 39 | 11 47 | 1 41 | 3 27 | 5 10 | 6 59 | 9 02 | 11 13 | 1 21 | 3 21 | 5 20 |
| 27 | 11 | சனி | 5 21 | 7 24 | 9 35 | 11 43 | 1 37 | 3 23 | 5 06 | 6 55 | 8 58 | 11 09 | 1 17 | 3 17 | 5 16 |
| 28 | 12 | ஞாயி | 5 17 | 7 20 | 9 31 | 11 39 | 1 33 | 3 19 | 5 02 | 6 51 | 8 54 | 11 05 | 1 13 | 3 13 | 5 12 |
| 29 | 13 | திங் | 5 13 | 7 16 | 9 27 | 11 35 | 1 29 | 3 15 | 4 58 | 6 47 | 8 50 | 11 01 | 1 09 | 3 09 | 5 08 |
| 30 | 14 | செவ் | 5 09 | 7 12 | 9 23 | 11 31 | 1 25 | 3 11 | 4 54 | 6 43 | 8 46 | 10 57 | 1 05 | 3 05 | 5 04 |
| 31 | 15 | புதன் | 5 05 | 7 09 | 9 20 | 11 28 | 1 22 | 3 08 | 4 51 | 6 40 | 8 43 | 10 54 | 1 02 | 3 02 | 5 01 |
| 1 | 16 | வியா | 5 02 | 7 05 | 9 16 | 11 24 | 1 18 | 3 04 | 4 47 | 6 36 | 8 39 | 10 50 | 12 58 | 2 58 | 4 57 |
| 2 | 17 | வெள் | 4 58 | 7 01 | 9 12 | 11 20 | 1 14 | 3 00 | 4 43 | 6 32 | 8 35 | 10 46 | 12 54 | 2 54 | 4 53 |
| 3 | 18 | சனி | 4 54 | 6 57 | 9 08 | 11 16 | 1 10 | 2 56 | 4 39 | 6 28 | 8 31 | 10 42 | 12 50 | 2 50 | 4 49 |
| 4 | 19 | ஞாயி | 4 50 | 6 53 | 9 04 | 11 12 | 1 06 | 2 52 | 4 35 | 6 24 | 8 27 | 10 38 | 12 46 | 2 46 | 4 45 |
| 5 | 20 | திங் | 4 46 | 6 49 | 9 00 | 11 08 | 1 02 | 2 48 | 4 31 | 6 20 | 8 23 | 10 34 | 12 42 | 2 42 | 4 41 |
| நவ 6 | 21 | செவ் | 4 42 | 6 45 | 8 56 | 11 04 | 12 58 | 2 44 | 4 27 | 6 16 | 8 19 | 10 30 | 12 38 | 2 38 | 4 37 |
| 7 | 22 | புதன் | 4 38 | 6 41 | 8 52 | 11 00 | 12 54 | 2 40 | 4 23 | 6 12 | 8 15 | 10 26 | 12 34 | 2 34 | 4 33 |
| 8 | 23 | வியா | 4 34 | 6 37 | 8 48 | 10 56 | 12 50 | 2 36 | 4 19 | 6 08 | 8 11 | 10 22 | 12 30 | 2 30 | 4 29 |
| 9 | 24 | வெள் | 4 30 | 6 34 | 8 45 | 10 53 | 12 47 | 2 33 | 4 16 | 6 05 | 8 08 | 10 19 | 12 27 | 2 27 | 4 26 |
| 10 | 25 | சனி | 4 27 | 6 30 | 8 41 | 10 49 | 12 43 | 2 29 | 4 12 | 6 01 | 8 04 | 10 15 | 12 23 | 2 23 | 4 22 |
| 11 | 26 | ஞாயி | 4 23 | 6 26 | 8 37 | 10 45 | 12 39 | 2 25 | 4 08 | 5 57 | 8 00 | 10 11 | 12 19 | 2 19 | 4 18 |
| 12 | 27 | திங் | 4 19 | 6 22 | 8 33 | 10 41 | 12 35 | 2 21 | 4 04 | 5 53 | 7 56 | 10 07 | 12 15 | 2 15 | 4 14 |
| 13 | 28 | செவ் | 4 15 | 6 19 | 8 30 | 10 38 | 12 32 | 2 18 | 4 01 | 5 50 | 7 53 | 10 04 | 12 12 | 2 12 | 4 11 |
| 14 | 29 | புதன் | 4 12 | 6 15 | 8 26 | 10 34 | 12 28 | 2 14 | 3 57 | 5 46 | 7 49 | 10 00 | 12 08 | 2 08 | 4 07 |
| **15** | **30** | வியா | 4 08 | 6 11 | 8 22 | 10 30 | 12 24 | 2 10 | **3 53** | **5 42** | 7 45 | 9 56 | 11 04 | 2 04 | 4 03 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு நுழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: ஐப் 30வ. (15-11-84) மாலே 4-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (3-53 — 5-42) மேட லக்னம்

# ஐப்பசி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

17உ (2-11-84) பகல் 10-54க்கு விரு-புத

22உ (7-11-84) பகல் 10-35க்கு மகர-குஜ

23உ (8-11-84) இரவு 10-54க்கு தனு-சுக்

16உ புதன் உதயம்

10உ சனி அஸ்தமனம்

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஐப்ப | 1உ | (17-10-84) | பி.இ. | 12-53 | முதல் | கடகம் |
| | 3உ | (19-10-84) | ,, | 4-50 | ,, | சிங்கம் |
| | 6உ | (22-10-84) | காலை | 5-52 | ,, | கன்னி |
| | 8உ | (24-10-84) | காலை | 5-31 | ,, | துலாம் |
| | 10உ | (26-10-84) | காலை | 5-44 | ,, | விருச்சிகம் |
| | 12உ | (28-10-84) | காலை | 8-24 | ,, | தனுசு |
| | 14உ | (30-10-84) | பகல் | 2-42 | ,, | மகரம் |
| | 16உ | (1-11-84) | பி.இ. | 12-41 | ,, | கும்பம் |
| | 19உ | (4-11-84) | பகல் | 12-57 | ,, | மீனம் |
| | 21உ | (6-11-84) | பி.இ. | 1-38 | ,, | மேடம் |
| | 24உ | (9-11-84) | பகல் | 1-15 | ,, | இடபம் |
| | 26உ | (11-11-84) | இரவு | 11-03 | ,, | மிதுனம் |
| | 29உ | (14-11-84) | காலை | 6-36 | ,, | கடகம் |

### கிரகநிலை குறிக்க:-

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி ஐப்பசி மீ 30உ மாலை 4-00 மணிக்கு மேட லக்னம் என அறிந்து கொண்ட பின் மேடம் என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

### மாதபலன்

சூரியன், சனி சேர்ந்து 4-ம் வீட்டில் இருப்பதால் அரசு இடைத்தேர்தல்களில் தோல்வி காணும். தேசிய பொருளாதாரம் விருத்தி குன்றும். தர்ம ஸ்தாபனங்கள், வைத்தியசாலைகள் போன்றன பாதிப்படையும். முதியவர்கள், நோயாளிகள் பாதிக்கப்படுவார்கள். தொற்று நோய்கள் பரவும். விவசாயம் முதலிய தொழில்கள் ஊக்கம் காணும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னாபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (ஐப்பசி மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 03 நிமிஷம்)

| வாரம் | 6...03<br>7...03 | 7...03<br>8...03 | 8...03<br>9...03 | 9...03<br>10...03 | 10...03<br>11...03 | 11...03<br>12...03 | 12...03<br>1...03 | 1...03<br>2...03 | 2...03<br>3...03 | 3...03<br>4...03 | 4...03<br>5...03 | 5...03<br>6...03 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

யாழ். வானியற் கழகம்
167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு இல.51

# ஐப்பசி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

17-10-84 — 15-11-84

சூரியன்: 17-10-84 பி. இரவு மணி 1-39-ல் துலாராசிப் பிரவேசம்.
17-10-84 உதயம் காலை 6-02
அஸ்தமனம் மாலை 5-50
15-11-84 உதயம் காலை 6-08
அஸ்தமனம் மாலை 5-42.

சந்திரன்: 18-10-84 அபர அஷ்டமி பி. ப. 2-13
24-10-84 அமாவாசை பி. ப. 5-39
25-10-84 சந்திர தர்சனம்
1-11-84 பூர்வ அஷ்டமி காலை 7-20
8-11-84 பூரணை இரவு 11-14

### கிரகங்கள்

புதன்: அஸ்தமனமாயிருக்கும் இக்கிரகம் 1-11-84-ல் மேற்கில் உதயமாகும். மாதமுடிவில் சூரியாஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 19பாகை உயரத்திற் காணப்படும். 2-11- 84-ல் விருச்சிகராசியிற் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: மாத ஆரம்பத்தில் சூரியாஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 32 பாகை உயரத்திற் காட்சியளிக்கும் இக்கிரகம் மாதமுடிவில் 38 பாகை உயரத்தில் கூடியபிரபையுடன் காட்சியளிக்கும். 8-11-84-ல் தனுராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் மேல் மேற்குவானில் 75 பாகை உயரத்திற் காணப்படுமிக்கிரகம் மாத முடிவில் 67 பாகை உயரத்திற் காணப்படும். 7-11-84-ல் மகர ராசியிற் பிரவேசிக்கிறது.

வியாழன்: மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 74 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 49 பாகை உயரத்திற் காணப்படும். 19-10-84-ல் தனுராசியில் பூராடம் 1-ம் பாதத்திலும் 9-11-84-ல் பூராடம் 2-ம்பாதத்திலும் பிரவேசிக்கிறது.

சனி: மாத ஆரம்பத்தில் சூர்யாஸ்தமனமானதும் மேற்குவானில் 23பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் 26-10-84-ல் சூர்யசாமீப்பியத்தால் மேற்கில் அஸ்தமனமடையும். 24-10-84-ல் துலாராசியில் விசாகம் 2-ம்பாதத்திற் பிரவேசிக்கிறது.

இந்திரன் (Uranus) இம்மாசம் முழுவதும் விருச்சிகராசியில் கேட்டை 1-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

வருணன் (Neptune) இம்மாசம் முழுவதும் தனுராசியில் மூலம் 2-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

குபேரன் (Pluto) இம்மாசம் முழுவதும் துலாராசியில் சுவாதி 1-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

### சமாகமாதிகள்

27-10-84 அதிகாலை சந்திரனுல் சுக்கிரன் கிரகண மடையும். இதனை யப்பான், பசுபிக், மத்திய அமெரிக்க பிரதேசங்களில் காணமுடியும்.
இன்று முன்னிரவு சுக்கிரனுக்குத் தெற்கே 3பாகையில் கேட்டை நக்ஷத்திரம்.

29-10-84 முற்பகல் சந்திரனுக்கு வடக்கு வியாழன் 3 பாகை. அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

29-10-84 நள்ளிரவின்பின் சந்திரனுக்குவடக்கு செவ்வாய் 2பாகை. முன்னிரவில் சந்திர அஸ்தமனத்தின் முன் அவதானிக்கவும்.

8-11-84 இரவு மணி 9-09 லிருந்து 1-42 வரை சந்திரன் பூமியின் அனுசாயையினுல் கிரகணமடையும். (Penumbral Eclipse) 100-ல் 83 பங்கு மறைக்கப்படும் இதனைச் சாதரணமாக அவதானிப்பதிலும் தூரதிருஷ்டி மூலம் அவதானிப்பது நல்லது.

13-11-84 அதிகாலை புதனுக்குத் தெற்கு கேட்டை நக்ஷத்திரம் 2 பாகை. முதல்நாள் சூர்ஸ்யாதமனத்தின் பின் அவதானிக்கவும்.

# "சோதிடம் கற்போம்"

ஞானி

(முன் தொடர்ச்சி)

**முக்கியமாக அவதானிக்க வேண்டியன:**

கிரகங்களுக்குரிய பெலங்களில் திக்குப் பெல மும்மொன்று. இலக்கினம் கிழக்குத் திக்காகவும், 4-ம் பாவம் தெற்குத் திக்கெனவும், 7-ம் பாவம் மேற்குத் திக்கெனவும்; 10-ம் பாவம் வடக்குத் திக்கெனவும் கொள்ளப்படும். இது தவிர ஒவ்வொரு கிரகத்துக்கும் ஒவ்வொரு திக்கு பெலமாகவும், அதற்கு எதிர்த்திக்கு பெலவீனமாகவும் குறிக்கப்படும்.

குருவும், புதனும் கிழக்குத் திக்கில் பெலமுடையவராவர். அதாவது குரு அல்லது புதன் இலக்கினத்தில் இருப்பின் திக்குப் பெலம் உண்டு. எதிரே உள்ள 7-ம் வீடாகிய மேற்கில் பெலமற்றவராவர். புதனும் குருவும் இலக்கினத்தில் பெலமுடையர். சந்திரனும் சுக்கிரனும் நான்காம் இடத்தில் பெலமுடையர். சனியும் இராகுவும் ஏழாம் இடத்தில் பெலமுடையர். சூரியனும் செவ்வாயும் பத்தாம் இடத்தில் பெலமுடையர். இக் கிரகங்கள் இவ்விடங்களுக்கு 7-ம் இடத்தில் பெலவீனப்படுவர். இதுவே திக்குப் பெலம் என்பதாகும்;

புதன் இரண்டாதிபதியாகி திக்குப் பெலம் பொருந்தினுல் தன லாபமுண்டு. குரு இரண்டாதிபதியாகி திக்குப்பெலம் பொருந்தினுல் விசேட தன லாபம் கிட்டும்.

இரண்டாதிபதியாயமைந்த குரு அல்லது புதன் 7-ம் இடத்தில் நின்றால் (திக்குப் பெலமற்ற தன்மையினுல்) தனபலனுக்குப் பாதகமாயிருக்கும். இவ்வாறே கிரகங்கள் திக்குப் பெலம் அடையும் போது அவர்களின் பாவாதிபத்திய காரகங்கள் செயற்படும் தன்மையையும் அவதானித்துக் கொள்ளல் வேண்டும்.

இரண்டாம் பாவத்துக்குப் பலன் கூறும்போது இராசி மண்டலத்தின் 2-ம் பாவமாகிய இடபத்தின் சுபாசுபத்தையும் இயைவு படுத்திப் பலன் பார்க்க வேண்டும்.


போசனம் இரண்டாம் பாவ காரகம். கேது மதுபானத்திற்குச் சார்பானவர். ஆகவே 2-ல் கேது நிற்க குடிப்பழக்கத்தில் நாட்டமுண்டாகும்.

சனி பொய் பேசத் தயங்காதவர். 2-ம் இடம் வாக்கு ஸ்தானம் என்பர். எனவே 2-ல் சனி இருக்க பொய் பேசக்கூசாத தன்மை காணும். ஆனுல் கேதுவும், சனியும் இவ்வாறமைந்த எல்லாச் சாதகத்துக்கும் இப்பலன்கள் சொல்லக் கூடாது. இருதய ஸ்தானமாகிய 5-ம் பாவமும் கன்ம ஸ்தானமாகிய 10-ம் பாவமும் சுபத்துவமடையின் இப்பலன்கள் நிகழாது. இவ்வாறு தனபலன் ஆராய்ச்சியிலும் முற்கூறிய விதிகளை மட்டும் வைத்து முடிவு கட்டலாகாது. தனம் பணமாகவுமிருக்கலாம்; காணி, வீடு, வாகனம் முதலியவையாகவுமிருக்கலாம். இவை நான்காம் பாவத்தைச் சேர்ந்தன. ஆகவே ஒருவன் தனவானுக இருப்பானே என அறிய நான்காம் பாவம் நான்காதிபதி ஆகியவற்றையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

பொக்கிஷாலயத்துக்குப் பொறுப்பாக உள்ள சிறுப்பருக்கு தினமும் பெருந்தொகைப் பணம் வந்துகொண்டிருக்கும். இதனுல் அவர் தனவந்தன் என்று சொல்ல முடியாது, 9-ம் பாவத்தாற் பெறப்படும் பாக்கிய சுகம் இயைந்தால் மட்டுமே தன சுகம் கிட்டும். 11-ம் பாவத்தாற் பெறப்படும் இலாபசித்தி உள்ளவருக்கே தனம் நிலைக்கும்;

கிரக பெலத்தில் ஸ்தானபெலம், திக்குப் பெலம், கால பெலம், சேஷ்டாபெலம், திருஷ்டி பெலம் நைசர்க்கிக பெலம் ஆகிய ஆறும் சேர்ந்து ஷட்பெலம் என்று சொல்லப்படும். முதல் பாடத்தில் ஸ்தான பெலமும், இரண்டாம் பாவத்தில் திக்குப் பெலமும் படித்தோம். ஏனையவற்றை இனி வரும் பாடங்களில் விளக்குவாம்.

(வளரும்)




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

### 17-10-84 முதல் 15-11-84 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேட ராசியில் ஜனனமானவர்களுக்குச் சூரிய பகவான் 7-ல் தாம்பர மூர்த்தியாக சஞ்சரிக்கிறார். மூர்த்தி பலமும் ஸ்தான பலமும் குறைவதால் தேகநலம், குடும்பநலம் ஆகியன பாதிப்புக்குள்ளாக வேண்டி வரும். சனி பகவானும் குரு பகவானும் 7-ல் சஞ்சரிப்பது குடும்பசுகக் குறைவை ஏற்படுத்தும். எனினும் குருபகவான் 9-ல் சஞ்சாரம் செய்வதால் அதிக பாதிப்புக்கள் ஏற்பட மாட்டாது. பொதுவாக வரவும் செலவும் சமமாக இருக்கும்.

குடும்பத்தவர்களுக்கு வரவுக்கு மிஞ்சிய செலவுகள் உண்டாகும். களத்திர துன்பம் தொடரும். புத்திரர் வழியால் உதவிகள் கிடைக்கும். உறவினருடன் பகை-விரோத சம்பவங்களும் நிகழக்கூடும்.

வர்த்தகர்களுக்குச் சுக்கிரனும், நவம்பர் 2-ன் மேல் புதனும் நல்ல ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்தாலும்; கிரக வேதைகளினால் "கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத" கதை போன்று முன்னேற்றம் பாதிப்புறும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகள் தொல்லைகளும் வேலைப்பளுக்களும் அதிகரிக்கும். கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும் சம்பவங்கள் தொடருவதால் எதிலும் நாவடக்கமும் பொறுமையும் இவர்களுக்கு நன்மை தரும். சிலர் கஷ்டப் பிரதேச மாற்றங்களையும் வேலை இழப்புக்களையும் எதிர்நோக்குவர்.

விவசாயிகளுக்குச் சனி உச்சம் பெற்று பலம் பெறுவதால் நல்ல விளைவும் - வருவாயும் கூடும். எதிர்பாராத இலாபங்களும் திடீர்ச் செலவுகளும் வரக்கூடும்.

தொழிலாளர்கட்குச் சம பலன்களே இம்மாதம் நிகழும். முதலாளிகள் முன் பிணக்குகள்

ஏற்படலாம்: சக தொழிலாளருடன் மோதிக் கொள்ளாமல் அவதானமாக நடப்பது நல்லது. இயந்திர / போக்குவரத்து சம்பந்தப்பட்ட தொழிலாளர் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டியும் வரலாம்.

மாணவர்கட்கு கல்வியில் ஊக்கம் இருப்பினும் குழப்ப நிலைமைகளே தொடரும். சுய முயற்சியும் குரு - தெய்வ பக்தியும் இருப்பின் கல்வித் தேர்ச்சியும் கிடைக்கும்.

பெண்களுக்கு 8, 9ல் சுக்கிரன் ஸ்தான பலம் பெறுவது மிக மிக நன்மையாகும். ஆனல் இவருடன் கேதுவும் இந்திரனும் சேர்ந்து சஞ்சாரம் செய்வதால் 'வெண்ணெய் திரளும்போது தாழி உடைந்த'' கதை போலாகிய சம்பவங்களும் நிகழக் கூடும்.

அதிஷ்ட நாட்கள்: அக் 17, 20, 31, 22 மு. ப, 29, 30, நவ 2, 3, 4 மு ப, 7, 8, 9 மு. ப, 12, 13,

துரதிஷ்ட நாட்கள்: அக் 22 பி. ப, 23, 24 மு.ப, 26, 27, நவ 4 பி.ப, 5, 6.




கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசிரிடம் 1,2-ம் கால்

இடபராசிக் காரருக்குச் சூரியன் 6-ல் இரஜத மூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்வது நன்மையாகும். வருமானம் அதிகரிக்கும். தேகசுகம், குடும்ப சுகம் குறைவுபட மாட்டாது. உறவினர், பெரியோர், நண்பர்களால் உதவிகள் உண்டாகும். சிலருக்கு பதவி உயற்சிகள் போன்ற வாழ்க்கைச் சிறப்புக்களும் உண்டாகலாம். ஆயினும் குரு அட்டமத்தில் சஞ்சரிப்பதால் எதிலும் எதிர்பாராத தடை தாமதங்கள், பாதிப்புக்கள், விபத்துக்கள், பகை விரோதங்கள், இழப்புக்களும் கலந்து நிகழலாம்.

குடும்பத்தவர்களுக்கு புதன் நவம்பர் 2 வரை ஸ்தான பலம் பெறுவது நன்மையானுலும், இவருடன் சூரியனும் சனியும் சம்பந்தப்படுவதும், சுக்கிரன் நவம்பர் 8 வரை ஸ்தான பலம் இழப்பதும் எதிர்பார்த்த நன்மை தர இடமில்லை. உடன் தொல்லை, புத்திரர் துன்பம், பகை விரோதம் முதலானவை உண்டாகும்.

வர்த்தகர்களுக்கு பற்பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் மாதமாக இம்மாதம் அமையலாம். முதலீடுகள் பல சிரமங்களை உண்டாக்கிவிடலாம். எதிலும் முன்னெச்சரிக்கையாக இருப்பதன் மூலம் இவர்கள் நட்டம் வராமல் தப்பிக் கொள்ளலாம்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகள் உதவி, வருவாய் அதிகரிப்பு, நன் மாற்றங்கள், பதவி உயர்வு போன்ற சுப பலன்களே அதிகம் நிகழ வேண்டும். ஆயினும் குருவின் அட்டம சஞ்சாரம் எதிர்பாராத திடீர்க் கஷ்ட நஷ்டங்களையும், மேலதிகாரிகளின் வெறுப்புக்களையும் சமாளிக்க வேண்டி வரும்.

விவசாயிகளுக்கு சூரியன் ஸ்தான பலத்துடன் மூர்த்தி பலமும் சனி ஸ்தான பலத்துடன் உச்ச பலமும் பெறுவதால் விளைவு அதிகரிக்கும். எதிர்பார்த்த லாபம் கிட்டும்.

தொழிலாளருக்குச் சென்ற மாதத்திலும் பார்க்க இம்மாதம் சிறப்பாக அமையும். வருவாய் அதிகரிப்பு மூலம் வாழ்க்கைத் தரம் உயரும். வேலை கொள்வோர் ஆதரவு கிட்டும்.

மாணவர்களுக்குக் கல்வித் தடைகள் ஏற்பட்டாலும் சுய முயற்சிகள் அதிகரிக்கும். அதனுல் கல்வியில் தேர்ச்சியடைவர். எனினும் மனக் குழப்பங்களுக்குள்ளாக வேண்டியும் வரும்.

பெண்களுக்கு வாழ்க்கையில் சிக்கல்களையும்; வேதனைகளையும் இந்த மாதத்தில் சமாளிக்க வேண்டி வரும். காதல் விவகாரங்கள் சங்கடங்களையும் தோற்றுவிக்கக் கூடும்.

அதிஷ்ட நாட்கள்: அக் 18, 19, 22 பி. ப, 23, 24 மு. ப, 31, நவ 1, 4 பி.ப, 5, 6, 9 பி. ப, 10, 11.

துரதிஷ்ட நாட்கள். அக் 24, 25, 28, 29, 30. நவ 7, 8, 9 மு. ப.




மிருகசிரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

இந்த இராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் சுவர்ண மூர்த்தியாக

5ல் பவனி வருகின்றார். மூர்த்தி பலம் பெறினும் கோசார பலம் குன்றுவதால் சமபலன்களே நிக ழும். வருவாய்க்கு மிஞ்சிய செலவுகளால் துன் பம் பெருகும். புத்திரரின் உதவி கிடைப்பினும் மன அமைதி குறையும். பிதிர் வழிப் பகை விரோ தங்கள் உண்டாகும். எனினும் குருபகவான் 7ல் பலம் பெறுவதால் பெரியோர் உதவிகள் கிடைப் பதுடன் குடும்ப சுகம், தேகசுகம் அதிகம் பாதிப் படைய இடமில்லை.

குடும்பத்தவர்களுக்கு 5-ல் சனியுடன் சூரிய னும் சேருவதால் புத்திரர்களின் உதவிகள் குறை வுறும். குடும்பத்தில் அமைதிக் குறைவுடன் வாக்கு விரோதங்களும் பிணக்குகளும் அடிக்கடி நிகழக் கூடும். எதிலும் நாவடக்கம் நன்மை தரும்.

வர்த்தகர்களுக்கு நவம்பர் 2 வரை சூரியனும், புதனும் சேர்ந்து இருப்பது நன்மையானாலும் முன்னேற்றங்களில் தடை தாமதங்கள் ஏற்படும். எதிலும் நேர்மையும் நிதானமும்தான் இவர்க ளுக்குத் துணை புரியும்.

உத்தியோகத்தர்களுக்கு இதுவரை கிடைத்து வந்த வசதிகள் குறையும். சக ஊழியர்களுடன் அடிக்கடி கருத்து வேற்றுமைகள் ஏற்படும். செல வுகள் அதிகரிப்பதால் கடன் பளு ஏறும். குரு வின் பலம் இருப்பதால் அவ்வப்போது அதிகாரி களின் உதவிகளும் கிடைக்கலாம்.

விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுகள் அதி கரிக்கும். கிடைக்க வேண்டிய மானியங்கள், பசளைகள், விதைகள் முதலானவை உரிய காலத் தில் கிடையாமையால் விவசாயக் கடன்கள் ஏறு வதுடன் விளைவும் குறையும். விடாமுயற்சியுடை யவர் பலனடைவர்.

தொழிலாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக் கும். வருவாய் குறைவுறும். தொழில் வாய்ப்புக் கள் குன்றும். சக தொழிலாளர்களால் ஏமாற் றப்படவும் கூடும். வேறு வேலைகளுக்குச் சென் றாலும் 'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்பது போலவே ஏமாற்றங்கள் எதிர்பார்த்திருக்கும்.

மாணவர்களுக்கு கல்வியூக்கம் குன்றும். சோம்பலும் விரக்தியும் அதிகரிக்கும். தேகநலம், மனநலம் பாதிப்புறும். குருவின் கோசாரபலன் சாதகமாக இருப்பதால் விடாமுயற்சி கல்வியில் தேர்ச்சியை உண்டாக்கக் கூடும்.

பெண் குலத்தினருக்குத் தொல்லைகள் அதி கரிக்கும். அடிக்கடி தேகபலம் குன்றும். ஆடம் பரச் செலவுகள், அகால போசனங்களால் கவலைப் படவேண்டி வரும். காதல் விவகாரங்கள் எதனை யும் சமாளிக்கலாம்.

அதிஷ்ட நாட்கள்: அக் 17, 20, 21, 22 மு.ப, 24, 25, நவ 2 பகல், 3, 4 மு.ப, 7, 8, 9 மு. ப, 12, 13.

துரதிஷ்ட நாட்கள்: 26, 27, 31, நவ 1, 9 பி. ப, 10, 11.



## கடகம்

**புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்**

இவ்விராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் முழுவதும் சூரிய பகவான் லோக மூர்த்தியாகி 4-ல் பலம் குறைந்து சஞ்சாரம் செய்கின்றார். சூரிய னுடன் சனி சேர்ந்து இருப்பதும் 6-ல் குரு சஞ்சா ரம் செய்வதும், நவம்பர் 7ன் மேல் செவ்வாய் 7-இலும், நவம்பர் 8-ன் மேல் சுக்கிரன் 6-இலு மாகச் சஞ்சரிப்பதும் ஸ்தான பலக் குறைவையே காட்டுகின்றன, பலவகையிலும் இவர்கள் கஷ்ட நஷ்டங்களையே அதிகம் சமாளிக்க வேண்டி வரும். பொருள் வருவாய் குறையும். எதிலும் ஏமாற் றங்களே இவர்களைத் தழுவும்.

குடும்பஸ்தர்கட்கு இல்வாழ்க்கை சிறப்பாக அமையாது. களத்திர - புத்திர கவலைகள் அதி கரிக்கும். வருமானம் கூடினும் வீண் செலவுகளும் அதிகரிக்கும். பெரியவர்களின் உதவி குறையும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் அதிகம் குறைவேற்பட மாட்டாது. எனினும் திருப்தி கரமான முன்னேற்றம் காண மாட்டார்கள். வங்கி யாளர்களின் உதவிகள் கிடைக்கும். கறுப்புச் சந்தை வியாபாரம் கவலைகளைப் பெருக்கியும் விட லாம்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகள் தயவு கிடைக்கும். ஆனால் செலவும் மன அமைதிக் குறைவும் கூடும். சக ஊழியர் ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்கு இடமாற்றமும் வரலாம்.

விவசாயிகளுக்கு அரச மானியம், கடனுதவி கள் முதலியன காலம் கடந்து கிடைப்பதால் உற்பத்தி பாதிப்படைவதுடன் நட்டமும் பெரு கும். கடன் தொல்லைகள் அதிகரிக்கும்.

தொழிலாளருக்கு வேலை வாய்ப்புக்கள் பெருகும். வருமானம் அதிகரிக்கும். முதலாளிகள் உதவி பெருகும். சக தொழிலாளர் ஒத்துழைப்பு தாராளமாகக் கிடைக்கும்.

மாணவர்களுக்கு கல்வித் தடைகள் ஏற்பட்டாலும், கல்வியில் முன்னேற்றமும் பெறுவர். பரீட்சைகளில் வெற்றி கிட்டும். சிலருக்கு உயர் கல்விப்பேறும் கிடைக்கும்.

பெண்களுக்குச் சோதனைக் காலமாக அமையும். காதல் முதலிய இரகசியத் தொடர்புகள் அம்பலத்துக்கு வருவதால் சிலர் அவமானப்படவும் கூடும். சிலர் - அசீரணக் கோளாறுகளால் துன்புறவும் கூடும்.

அதிஷ்ட நாட்கள்: அக் 18, 19, 22, பி. ப, 23, 24 மு. ப, 26, 27, நவ 4 பி. ப, 5, 6, 9 பி. ப, 10, 11, 14, 15.

துரதிஷ்ட நாட்கள்; அக் 28, 29, 30, நவ 2, 3, 4 மு. ப, 12, 13.



## சிங்கம்

**மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்**

இந்த இராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் இந்தமாதம் 3ல் சுவர்ணமூர்த்தியாகிப் பலம் பெற்றுப் பவனிவருகின்றார். மூர்த்தி பலமும் ஸ்தானபலமும் பெறுவதால் இவர்களுக்குக் காரியசித்தி, பொருள்வரவு, மனநிறைவு, விற்றல் வாங்கல் மூலமான லாபங்கள், வெளிநாட்டுப் பொருள் வரவு, பிரயாண சுகம், குடும்பத்தில் விவாகாதி சுபநிகழ்ச்சிகள் முதலான விசேடபலன்கள் நிகழும்.

குடும்பத்தவர்கட்கு இம்மாதம் வாழ்க்கைத் தரம் உயரும். களத்திர வழியால் உதவிகள் கிடைக்கும். நவம்பர் 7 வரையும் செவ்வாய் 5ல் இருத்தலின் புத்திரர் சம்பந்தப்பட்ட கவலைகள் ஏற்படக்கூடும். பெரியவர்களின் உதவிகளுண்டு.

வர்த்தகர்களுக்கு இலாபமான மாதமாக அமையும். வங்கி உதவிகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். நவம்பர் 2வரை புதன் ஸ்தானபலன் குன்றி இருப்பதால் சிலருக்குத் தனவிரயமும் சிறு சிறு கஷ்டநட்டங்களும் ஏற்படக்கூடும்.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகளின் உதவிகள் வளரும். சிலருக்குப் பதவி உயர்ச்சிகளும் கிடைக்கும். வசதியான இடமாற்றங்களுண்டு. பிரயாணங்களில் விபத்துக்களேற்படக் கூடும்.

விவசாயிகட்கு அரசமானியம், விதை தானியம், பசளை முதலியன போதியளவு கிடைக்கும். பயிர்ச்செய்கை விருத்திபெறும். விளைவுகள் அதிகரிக்கும். சந்தைப்படுத்தலில் லாபங்கிடைக்கும்.

தொழிலாளர்கட்கு முதலாளிகளின் ஆதரவு அதிகரிக்கும். விருப்பம்போல் வசதியான வேலை வாய்ப்புக்கள் கிட்டும். உடன் தொழிலாளருடன் ஒத்துழைப்பும் நட்பும் வளரும். தொழிற்சங்கத்தின் மதிப்பு உண்டாகும். தொழிற் பிணக்குகள் சுமுகமாகத் தீர்க்கப்படும்.

மாணவர்கட்கு வசதிகள் இருப்பினும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புக் குறையும். சிலருக்குக் கல்வியைத் தொடருவதில் தடைதாமதங்கள் ஏற்படக் கூடும். நவம்பர் 2ன் மேல் புதனின் சஞ்சாரம் சாதகமாக அமைவதால் இக்காலம் முதல் கல்வியில் முன்னேற்றம் காணுவர்.

பெண் குலத்தினருக்கு நல்லசுப சோபனகாலமாக இந்தமாதம் அமையும். காதல் கைகூடும். குடும்பப்பெண்களுக்கு கணவனின் மதிப்பும் ஆதரவும் கிடைக்கும். மன விருப்பம்போல் பிரயாண சுகங்கள் கைகூடும்.

அதிஷ்ட நாட்கள்: அக் 17, 20, 21, 22மு.ப.24, 25, 28, 29, 30, நவ 7, 8, 9, 12, 13.

துரதிஷ்டநாட்கள்: அக் 18, 19, 31 நவ 1, 4பி.ப, 5, 6, 14, 15.



## கன்னி

**உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை 1, 2-ம் கால்**

இந்த இராசியில் ஜனனமானவர்கட்குச் சூரியன் 2ல் தாம்பரமூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்வது துன்பமே. இதனுடன் ஏழரைச் சனியின் கடைசிக் காலமும் சேருகின்றது. செவ்வாய் இவர்களுக்கு 4லிலும் 5திலுமாக இம்மாதம் சஞ்சாரம் செய்வதும் துன்பத்தையே குறிக்கின்றன. தேக சுகக்குறைவு, ஏமாற்றம், இடப்பிரிவு, களத்திர துன்பம், பொருள்நட்டம், விபத்துக்கள் போன்ற

பல விதமான கஷ்ட பலன்களை இவர்கள் அனுப விக்கக் கூடும்.

சனி 2ல் இருப்பது குடும்பத்தவர்களுக்குத் தொல்லைகளையே கொடுக்கும். குடும்பத்தில் சச்ச ரவுகள், பிணக்குகள் அதிகரிக்கும். பொருள் வர வாய் குறையும். கடன் பயமும் ஏற்படும். புத்தி ரர் துன்பமும் இவர்களுக்கு அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு இம்மாதம் முதற்பகுதியில் வருமானம் குறையும். வங்கிகளில் எதிர்பார்ப்புக் கள் ஏமாற்றத்தைத் தரும். வியாபார முன்னேற் றம் பாதிக்கப்படும். கறுப்புச்சந்தை வியாபாரம் பெரும் இழப்புக்குள்ளாக்கிவிடும்.

உத்தியோகத்தில் உள்ளவர்கட்கு அதிகாரிக ளின் ஆதரவுகள் குறையும். சகஊழியர்களுடன் பகை விரோதங்கள் ஏற்படக் கூடும். சிலருக்குத் தற்காலிக வேலைநீக்கங்கள் ஏற்படலாம்.

விவசாயிகளின் பயிர்ச்செய்கை பாதிப்புகளுக் குள்ளாகும். பூச்சிகள் மிருகங்களாலும் பயிரழிவு கள் ஏற்படலாம். கடன் பழு ஏறும், விளைவுகள் சந்தைப்படுத்தலில் சிரமங்களேற்படும்.

தொழிலாளர்களுக்கு இம்மாதம் பலவித நெருக்கடிகள் தோன்றக்கூடும். வேலையின்மை தொழிலிடங்களில் பிணக்குகள், சக தொழிலாளி களுடன் பகைமை முதலான சம்பவங்கள் தொட ரலாம். எதற்கும் நிதானமும் மௌனமும் சாந்தி தரலாம்.

மாணவர்கட்கு கல்வியில் குழப்பநிலை தொட ரும். ஏழரைச் சனியின் கடைசிக் காலத்தில் கல் வியில் தடை தாமதங்கள் ஏற்படுவதால் சிலருக்கு மனக்குழப்பங்களும் ஏற்படலாம். ஆசிரியர் உதவி கள் குறையும்.

பெண்களுக்கு பற்பல பிரச்சினைகள் இம் மாதத்தில் தோன்றக்கூடும். கன்னிப் பெண்கட்கு விவாகச் சிக்கல், தடை, காதல் விவகாரங்களில் தோல்விகள், அவமானமான சம்பவங்கள் யாவும் ஏற்பட இடமுண்டு.

**அதிஷ்ட நாட்கள்:** அக் 18, 19, 22 பி. ப; 23, 24 மு. ப, 26, 27, 31, நவ 1, 9 பி. ப, 10, 11, 14, 15.

**துரதிஷ்ட நாட்கள்:** அக் 20, 21, 22 மு.ப, நவ 2, 3, 4 மு.ப, 7, 8, 9 மு. ப.



# துலாம்

**சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3.**

இந்த இராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் இம்மாதம் ஜன்மத்தில் சுவர்ண மூர்த்தி யாகிப் பவனி வருகின்றார். சூரியன் மூர்த்தி பலம் பெற்றாலும் ஸ்தான பலம் குறைகின்றது. மேலும் ஏழரைச் சனியின் சஞ்சாரமும் குருவின் குரூர கோசர சஞ்சாரமும் சேர்ந்து நிகழ்கின்றது. பெரும்பாலும் இவர்களுக்குத் தேகசுகக் குறைவு, பொருள் நட்டம், விபத்துக்கள், அந்நியதேச சஞ் சாரம், குடும்பக் கஷ்டம் முதலான கஷ்ட பலன் களுடன் அற்ப பொருள்வரவு ஆதியனவும் கலந்து நிகழும்.

குடும்பத்திலுள்ளவர்களுக்கு களத்திர புத்திர துன்பங்கள் அதிகரிக்கும். பணக் கஷ்டமும் உதவி கள் செய்யும் வகையில் உறவினர்களின் பிடுங்கல் களும் ஏற்படலாம். மனஅமைதிக் குறைவும் ஏற் படக் கூடும்.

வர்த்தகர்களுக்கு எதிர்பாராத பொருள் நட் டங்கள் ஏற்படலாம். முதலீடுகளில் இலாபம் குறையும். கடை அடைப்புக்கள், கொள்ளை போதல் முதலான சம்பவங்கள் தொடரக்கூடும். வங்கிகளின் உதவிகளில் மாற்றம் ஏற்படலாம்.

உத்தியோகத்தர்கட்கு புதுப் பொறுப்புக்கள் ஏற்படுவதன் மூலம் வேலைப்பளுவும் அதிகரிக்கும். சக ஊழியரின் ஒத்துழைப்புக் குறையும். மேலதி காரிகளின் ஆதரவு குறையும். சிலருக்கு வசதிக் குறைவான இடங்களுக்கு இடமாற்றமும் கிடைக் கலாம்.

விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுகள் அதி கரிக்கும். பயிர் விளைவுகள் சந்தைப்படுத்த முடி யாமல் அல்லது தரகர்களின் சுரண்டல்களால் வேதனைப்பட நேரிடலாம். எதிலும் நம்பி மோசம் போகாமல் கவனித்துக் கொண்டால் தப்பித்துக் கொள்ளலாம்.

தொழிலாளருக்குள் தொழிற் பிணக்குகள் அதிகரிக்கும். முதலாளிகள் / வேலை கொள்ளுவோ ரின் வெறுப்புக்களுக் குள்ளாக வேண்டியும் வரும். வேலை வாய்ப்புகள் குறையும். சிலர் விபத்துக் களுக்குள்ளாக வேண்டியும் நேரிடலாம்.

மாணவர் கல்வி முன்னேற்றம் குறைந்து காணப்படும். ஆசிரியர் - மாணவர் நல்லுறவுகள் சீராக இருப்பினும் மாணவர்களின் அக்கறையற்ற தன்மையால் கல்வியில் தடை, தாமதங்கள் தொடரலாம். சுய முயற்சியும் ஊக்கமும் மாணவர்களுக்கு நன்மை தரும்.

பெண்களுக்கு மறைமுகமான எதிர்ப்புக்கள் அதிகரிக்கும். கன்னிப் பெண்கள் உணர்ச்சிவசப் படுதலால் ஏமாற்றப்படவும் கூடும். காதல் விவகாரங்களில் முன்னேற்றம் குறையும். விவாகப் பேச்சில் சிக்கல்கள் உண்டாகலாம்.

அதிஷ்ட நாட்கள்: அக் 17, 20, 21, 22 மு.ப. 24, 25, 28, 29, 30, நவ 2, 3, 4 மு.ப 12, 13.

துரதிஷ்ட நாட்கள்: அக் 22 பி. ப, 5, 6, 9 பி. ப, 10, 11.



## விருச்சிகம்

விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

இந்த இராசியில் ஜனனமானவர்களுக்கு இம் மாதம் சூரியன் 12-ல் லோக மூர்த்தியாகிப் பலம் குறைந்து சஞ்சாரம் செய்கின்றார். ஏழரைச் சனியின் காலமும் தொடருகின்றது. எனினும் குரு சுக்கிரனின் சஞ்சாரம் வலுப்பெற்று இருக்கின்றமையால் அதிகம் பாதிப்புக்களுக் குள்ளாகாமல் தப்பிக் கொள்ளுவார்கள். சம சுகம், சம பொருள் வரவு, தொழிற் சித்தி, தடை தாமதங்களின் மேல் காரிய சித்திகள் ஆகியன நிகழும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பங்களில் நல்லுறவு தொடரினும் சிறுசிறு துன்பங்களும் ஏற்படும். புத்திரர் உதவிகள் குறைவதுடன் கவலைகளும் உண்டாகலாம். நெருங்கிய உறவினர்களுக்குள் கருத்து வேற்றுமைகள் அவ்வப்போது உண்டாக வேண்டியும் வரலாம்.

உத்தியோகத்தி லுள்ளவர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். சக ஊழியர்களுடன் கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். சிலருக்குக் கஷ்டப் பிரதேசங்களுக்கு இடமாற்றமும் கிடைக்கலாம். வருமானத்துக்கு மேல் செலவுகள் அதிகரிக்கலாம்.

விவசாயிகளுக்கு விளைச்சல் குறைவு படலாம். சில வேளை பயிரழிவுகள் ஏற்பட்டுப் பெரிய இழப்புக்களையும் எதிர்நோக்க வேண்டியும் நேரிடும். கடன்களின் பேரில் பெரிய அளவில் பயிரிடுதலைத் தவிர்த்தால் பெரு நட்டங்களிலிருந்து தப்பிக் கொள்ளலாம்.

தொழிலாளர்களுக்கு தொழில் பிணக்குகள் அதிகரித்துக் கொண்டே போகலாம். சக தொழிலாளருடன் ஒத்துப் போவதால் சில பிரச்சினைகளிலிருந்து தப்பிக் கொள்ளுவார்கள், வேலை வாய்ப்பு வசதிகள் குறையும்.

மாணவர் கல்வியில் தடை தாமதங்களோ அதிகரிக்கும். திடீர் முடிவுகளும் உணர்ச்சிவசப் படுதலும் சிந்தையைச் செயல் இழக்கச் செய்யலாம். இதனால் பரீட்சைகளில் நல்ல முடிவுகளை எதிர்பார்க்க முடியாமலும் போகலாம்.

பெண்களுக்கு பல சிக்கல்களைச் சமாளிக்க முடியாமலும் போகலாம். விவாக விஷயங்கள் தடை தாமதங்கள் சிரமங்களின் மேல் நிகழக் கூடும். காதல் விவகாரங்கள் நீண்டுகொண்டு செல்வதால் முடிவெடுக்க முடியாமல் திண்டாட நேரிடலாம்.

அதிஷ்ட நாட்கள்: அக் 18, 19, 22 பி. ப, 23, 24 மு.ப. 26, 27, 31, நவ 1, 4 பி. ப, 5, 6, 14, 15.

துரதிஷ்ட நாட்கள்: அக் 17, 24, 25, நவ 7, 8, 9, 12, 13.



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனு இராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் இந்த மாதம் 11-ல் தாம்பர மூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்கின்றார். சூரியன் சம மூர்த்தி பலம் பெறுகின்றார். ஆனால் ஜன்மத்தில் குருவும் செவ்வாயும் சேர்ந்து சஞ்சாரம் செய்கின்றார். சூரியன் சம மூர்த்திபலம் பெற்றாலும் ஸ்தான பலம் பெறுகின்றார். ஆனால் ஜன்மத்தில் குருவும் செவ்வாயும் சேர்ந்து சஞ்சாரம் செய்கின்றனர். சனி பகவான் 11-ல் பலம் பெறுகின்றார். பொதுவாக இவர்களின் வாழ்க்கையில் குறிப்பிடக்கூடிய மாற்றங்கள் ஏற்பட இடமில்லை.

குடும்பங்களில் நல்லுறவு வளரும். சந்தோஷமான வாழ்வு தொடர்ந்தாலும் சிறு சிறு பிணக்குகளும் ஏற்படவே செய்யும். புத்திரர்களால் செலவுகள் ஏற்படும். இனபந்துக்களிடமிருந்து விலகி வாழவேண்டியும் வரும்.

வர்த்தகர்களின் முயற்சிகள் நற்பலன்களைக் கொடுக்கும். நவம்பர் 2 வரையும் வங்கிகளின் உதவிகள் கிடைக்கும். புது முதலீடுகளை ஆரம்பிக்கலாமெனினும் எதிர்பாராத செலவினங்களால் இடையூறுகளும் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்குத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சக ஊழியரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வசதியான இடங்களுக்கு இடமாற்றமும் பெறலாம். அதிகாரிகளின் ஆதரவும் மதிப்பும் கிடைக்கும்.

விவசாயிகளுக்குச் சனியின் சஞ்சாரம் சாதகமாக இருத்தலின் அதிக வருவாய் கிடைக்கும். உரிய காலங்களில் பயிர்ச்செய்கை, பசளையிடல், சந்தைப்படுத்தல் முதலியன கவனிக்கப்படுதலால் நல்ல விளைவும் லாபமும் பெறுவார்கள்.

தொழிலாளர்கட்கு சனி பகவான் 11-ல் உச்மடைவதால் நல்ல பலன்களே நிகழும். முதலாளிகளுடன் நல்லுறவு. ஒத்துழைப்பு வளரும். வேலை வாய்ப்புக்கள் அதிகரித்தலால் பொருள் வருவாயும் அதிகரிக்கும்.

மாணவர்களுக்கு இம்மாதம் புதனின் சஞ்சாரம் சாதகமாக அமையாமையால் கல்வித் தேர்ச்சி குறையும். மாணவர்களிடையே மறதி, அக்கறையின்மை, விரக்தி மனப்பான்மை அதிகரிக்கும்.

பெண்களுக்கு ஆடம்பரச் செலவினங்களில் ஆர்வம் மிகும். விவாகப் பேச்சுக்கள் வளர்ந்து கொண்டு போகும். குடும்பப் பெண்களுக்கு இம்மாதம் நற்பலன்கள் நிகழும்.

அதிஷ்ட நாட்கள்: அக் 20,21, 22மு.ப,24,25,28,
29,30, நவ2,3,4மு.ப.7,8,9.
துரதிஷ்ட நாட்கள்; அக் 18, 19, 26, 27,
நவ 9 பி. ப, 10, 11, 14, 15;



## மகரம்

உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2.

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 10-ல் சுவர்ண மூர்த்தியாகிப் பவனி வருதல் சிறப்பாகும். ஆயினும் சூரியன் நீசராசியில் சனி சேர்க்கை பெறுவதும், செவ்வாயும் குருவும் துர்க்கோசாரம் செய்வதும் பலக்குறைவையே காட்டுகின்றன. எந்த விஷயங்களிலும் தடை தாமதங்கள் ஏற்படுதல் சர்வ சாதாரணமாகிவிடும். பணவருவாய் இருப்பினும் செலவுகளும் அதிகரிக்கும். அடிக்கடி தேகசுகக் குறைவும் மனக் குழப்பங்களும் ஏற்படலாம்.

குடும்பத்தவர்களுக்கு இம்மாதம் குடும்பசுகம் திருப்தியளிக்காது. வீட்டில் மங்கல நிகழ்ச்சிகள் இடம் பெற்றாலும் இனசன விரோதங்களும் ஏற்பட இடமளித்து விடும். புத்திரசுகம் குறையும்.

வர்த்தகர்களின் வியாபாரம் வளமாக நடைபெறும். வங்கி முதலான நிதி நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கும். புதனின் சஞ்சாரம் பலம் பெறுவதால் புது முதலீடுகளும் நல்ல இலாபம் தரும்.

உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு பல வகைகளிலும் சோதனைகள் தொடரும். சிலருக்கு வேலை நீக்கங்கள் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும்.

விவசாயிகளுக்குப் பயிர்ச்செய்கை நல்ல பலனளிக்கும். மானிய உதவி முதலானவை கிடைத்தாலும் தரகர் முதலியோரின் சுரண்டுதலால் லாபம் குறையும். கடன் பயம் உண்டாகும்.

தொழிலாளருக்கு வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும். ஆனால் வேலைப்பளுவும் கூடும். பொறுமையுடன் செயற்பட்டால் முதலாளிகளின் உதவிகள் உண்டு. சிலருக்குப் புதுத்தொழில் மாற்றங்களும் ஏற்படலாம்.

மாணவர் கல்வியில் அக்கறை இருந்தாலும் படிப்பைத் தொடரும் வசதிகள் குறைவுறும். மன அமைதியற்றுத் திரிய வேண்டியும் வரும். திடீர் முடிவுகளைத் தவிர்ப்பதாலும் விடா முயற்சியாலும் கல்வியில் தேர்ச்சி பெறுவார்கள்.

பெண்களுக்கு ஆடம்பரப் பொருட்களில் விருப்பும் ஆர்வமும் அதிகரிக்கும். காதல் விவகாரங்களில் சிக்கல்கள் ஏற்படும். விவாகப் பேச்சுக்கள் கால வரையறையின்றி நீண்டுகொண்டு போகலாம்.

அதிஷ்ட நாட்கள்: அக் 22 பி. ப, 23, 24 மு. ப,
26, 27, 31, நவ 1, 4 பி. ப,
5, 6, 9 பி. ப, 10, 11.
துரதிஷ்ட நாட்கள்: அக் 17, 20, 21, 22 மு. ப,
28, 29, 30, நவ 12 13.



# கும்பம்

**அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் கால்**

கும்ப ராசியில் ஜனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 9-ல் ரஜத மூர்த்தியாகிப் பவனி வருகின்றார். மூர்த்தி பலம் பெற்றாலும் ஸ்தானபலம் குறைந்துள்ளதால் சம பலன்களே நிகழும். மேலும் குரு பகவான் 11-ல் பலம் பெறுவதால் எல்லவகைப் பிரச்சினைகளையும் சமாளித்து விடுவார்கள். சூரியன் நீச ராசியில் சனி சேர்க்கை பெறுவது சிரமங்களைக் கொடுக்க ஏதுவாகும். பண வருவாய் இருக்கும். இடைக்கிடை தேகசுகக் குறைவுகள் ஏற்படும்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்பத் தொல்லைகள் பிணக்குகள் அதிகரிக்கும். பொருட் செலவுகளும் புத்திரர் கவலைகளும் ஏற்படும். இனசன பகை விரோதங்களும் ஏற்படும். நிதி நிலைமைகள் சீராக இருக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் காணும். புது முதலீடுகள் உற்சாகம் அளிக்கும். வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களின் ஆதரவு பெருகும். கறுப்புச் சந்தை வியாபாரம் இலாபம் கொடுத்தாலும் கவலைகளையும் கொடுத்து விடும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பதவியுயர்வு முதலான நற்பலன்களே அதிகம் நிகழும். மேலதிகாரிகளின் நல்லாதரவு கிடைக்கும். சக ஊழியரின் ஒத்துழைப்புக்களும் கிடைக்கும். சிலருக்கு வசதியான இடமாற்றமுமுண்டு.

விவசாயிகளுக்கு விளைவுகள் அதிகரிக்கும். உற்பத்திகளுக்கு நல்ல சந்தை வாய்ப்புக்கள் கிடைப்பதால் இலாபங்கள் அதிகரிக்கும். அரச மானியம் முதலியன உரிய தேவையான காலங்களில் கிடைப்பதால் பயிர் உற்பத்தியும் பெருகும்.


தொழிலாளருக்குத் தொழில் விருத்தியும் தொழிலார்வமும் அதிகரிக்கும். முதலாளிகளின் ஆதரவும் மதிப்பும் உயரும்; வருமானம் அதிகரிக்கும். தொழில் பிணக்குகள் ஏற்பட்டாலும் பொறுமையால் தந்திரமாகத் தப்பிக்கொள்ளலாம்.

மாணவர்களுக்கு கல்வித் தடைகளும் சிரமங்களும் ஏற்பட்டாலும் சுய முயற்சியும் ஆர்வமும் அதிகரிக்கும். ஆசிரியர் - மாணவர் நல்லுறவுகள் அதிகரிக்கும். கல்வித் தேர்ச்சியும் பெறுவர்.

பெண்களுக்கு சந்தோஷகரமான காலமாக அமையும். காதல் விவகாரங்களில் விருப்பம் போல் வெற்றியும் பெறுவர். மன நிறைவும் வாழ்க்கை வசதியும் கூடும். ஆனால் வாக்கு விரோதங்களால் துன்பங்களும் ஏற்படும்.

அதிஷ்ட நாட்கள்: அக் 17, 24, 25, 28, 29, 30
நவ 2, 3, 4 மு. ப, 7, 8,
9 மு. ப, 12, 13.

துரதிஷ்ட நாட்கள்: அக் 18, 19, 22 பி. ப, 23,
24 மு. ப, 31, நவ 1, 14, 15.



# மீனம்

**பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி**

மீன இராசியில் ஜனனமானவர்களுக்கு சூரிய பகவான் இந்த மாதம் 8-ல் லோக மூர்த்தியாக மூர்த்தியாகிப் பலம் குறைந்து சஞ்சாரம் செய்கின்றார். அத்துடன் அட்டமத்துச் சனியின் கடைக்கூறும் நிகழுகிறது. பெரும்பாலும் இவர்களுக்கு இம்மாதம் பிரச்சினைகள் கூடிக்கொண்டே போகும். வருமானமும் பெருமளவில் குறைவுபடும். தேக சுகமும், குடும்ப சுகமும் அடிக்கடி பாதிக்கப்படும்.

குடும்பத்தில் சுகக்குறைவுகள் அடிக்கடி ஏற்படும். இனத்தவருடன் பகை விரோதச் சம்பவங்கள் நிகழும். புத்திரரின் உதவிகள் கிடையாமல் போகும். எல்லாவற்றிலும் மேலாகப் பணக் கஷ்டம் பெரிய சிரமங்களைக் கொடுக்கும்.

வியாபாரிகளுக்கு வியாபாரம் பல சிரமங்களைக் கொடுக்கும். நிதி நிலைமைகளும் சீராக அமையாது. கறுப்புச்சந்தை வியாபாரம் கஷ்ட நஷ்டங்களையே கொடுக்கும் புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். கஷ்டப் பிரதேசங்களுக்கு இடமாற்றமும் கிடைக்கும். வேலைப் பொறுப்புக்கள் அதிகரிப்பதால் திண்டாடவேண்டி வரும். சக ஊழியரின் ஒத்துழைப்பும் குறையும்.

(19-ம் பக்கம் பார்க்க)

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(முன் தொடர்ச்சி)

எண் 60; தமது சக்தியை உணர்ந்து எதையும் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுவர். காணி, பூமி, சொத்துச் சேரும். தாம்பத்திய வாழ்வில் பூரண சுகமடைவார்கள். மனைவி, மக்கள் உதவிகள் இருக்கும். ஆனால் உறவினர்களால் தொல்லைகள் அடிக்கடி ஏற்படும். கலை, சங்கீதம், அரசியல் ஆராய்சி ஆகியவற்றில் சிறப்படைவார்கள். எப்பொழுதும் சுதந்திர மனப்போக்குடையவர்களாதலால், எவரினதும் கட்டுப்பாடுகளை, அரசாங்கத்தின் கடுமையான சட்ட திட்டங்களை வெளிப்படையாக எதிர்க்கும் வல்லமையுடையவர்கள். பெருமை கிடையாது. சிக்கனமாக வாழ முற்படுவார்கள். தேவைகளை அதிகரிக்காது போதும் என்றிருப்பார்கள்.

எண் 69: கௌரவமான இவர்கள் ஓடி ஓடிப் பொருள் சேர்ப்பார்கள். கவர்ச்சிகரமான ஆடை, ஆபரணங்கள் அணிவர். எதிர்பாலாரின் தொடர்பு, அவர்களுடன் அரட்டை அடித்துப் பொழுது போக்குவதென்றால் மிகத் திருப்தியாய் இருக்கும். இவர்களை வாழ்த்தியும், ஏமாற்றியும் பலர் இவர்களின் பொருளைப் பறித்து விடுவார்கள். தமது வாழ்க்கைக்கென்று சேமிப்பு இருக்க மாட்டாது. செலவு செய்வதில் மிகச்சூரர்கள். அழகுக்கு மிக முக்கிய இடம் கொடுப்பார்கள். பொருளைச் செலவு செய்து ஜாலியாக வாழ்வோம்; எதற்காக நாம் சேமிக்க வேண்டும் எனத் தத்துவம் பேசுவார்கள். திடீர்க் கோபம் – திடீர் அன்பு நேற்றுக் கோபம், இன்று உறவு. நாளையோ குடும்பம் நடத்தவும் முற்படுவர். தாமரை இலைத் தண்ணீர் போன்ற வாழ்வு நடத்தும் இவர்கள் தரகு; கமிஷன் தொழில்களில் அதிகமாக ஈடுபட்டுப் பொருள் தேடுவர். பல நண்பர்கள் இவரது வாழ்க்கை உயர பலவித உதவிகளைச் செய்வார்கள்.

எண் 78: தெய்வீக மயமான எண் ஆகும். சமய, சாஸ்திரத் தொடர்பிருக்கும். பொதுநலத் தொண்டு - மக்களுக்காக உழைக்கும் தொண்டர்களாக வாழ்கின்றார்கள். இவர்களை நாடி வருபவர்களுக்காக பல உதவிகளையும் செய்து கொடுப்பார்கள். இவர்களுடைய சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கும். மனச்சாட்சிக்குப் பயந்தவர்கள் பாவச் செயல்கள் செய்யப் பயந்தவர்களாக இருப்பார்கள். தெய்வ சோதனைகள் பல வந்து வாழ்க்கையில் பயமுறுத்தியபடி இருக்கும். மற்றவர்களை மதித்து நடக்கும் உயரிய பண்பு இவர்களிடம் மிகுந்து காணப்படும்: புண்ணியவான்களாகவும், 40 வயதிற்குப் பின்பு தெய்வசக்தி ஏற்படக் கூடியதாகவும் இருக்கும்.

எண் 87: மாந்திரீக சக்தி அமைப்பையும், அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் மாறான கறுப்புத் தொழில்களை செய்பவர்களாகவும், திருட்டு, ஏமாற்றுச் செயல்களைச் செய்து பொருள் சேர்ப்பவர்களாகவும் இருக்கின்றார்கள். தர்மம், சத்தியத்திற்கு எதிரான செயல்களைச் செய்து பாபங்களைக் கூட்டிக் கொள்கின்றார்கள். குறுக்கு வழியில் பணம் தேடுபவர்கள். சமுதாயத்தில் பெரியவர்களாக, கௌரவமானவர்கள்போல நடமாடுகின்றார்கள். இவர்கள் பல சந்தர்ப்பங்களில் விதிவசப்பட்ட பலன்களால் கஷ்டப்படுகின்றார்கள். குற்றவாளிகளால் தண்டிக்கப்படுவார்கள். கண்டிப்பானவர்கள். இரும்பு, மின்சாரம், மருத்துவம், எண்ணெ, கறுப்புத்தொழில் போன்றவற்றின் தொடர்பில் பொருளைப் பெருக்கிக் கொள்ளுகின்றார்கள். தெய்வ பக்தியுடன் மற்றவர்களை பாதிக்காமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். தனது ஆற்றலை சரியான வழியில் பாவித்தால் நிட்சயம் ராஜவாழ்க்கை வாழுவார்கள்.

எண் 96: எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்கள். மன வலிமை மிக்கவர்கள். ஆராய்ச்சி, அனுபவம் ஆற்றல் மிக்கவர்கள். மனைவியால் உதவிகளும் பொருள் வரவும் உண்டு.

ஆனுல் புத்திரர்களால் கஷ்டங்களும், அவமானங்களும் ஏற்படும். இனஜனங்கள் எதிர்ப்பார்கள். ஆராய்ச்சி, பழுது பார்த்தல், சமயத்துறை, ஆகியவை தொடர்பான துறைகளில் அதிக பொருளைத் தேடிக் கொள்வார்கள். ஜன வசீகரத்தினை தேடித் தரும் எண் ஆகும். இயந்திரங்களை உருவாக்குபவர்களாயின் இலட்சம் இலட்சமாகச் சம்பாதிப்பார்கள்; ஆனுல் சேமிக்கத் தெரியாது உடனுக்குடன் செலவழித்து சுகம் காண்பார்கள். பொருள் வந்து போனபடி இருக்கும்.

எண் 105: மக்களுடன் தொடர்பான தொழில் அமைப்புள்ளவர்கள் அரசியல், வியாபாரம், கணிதம், விஞ்ஞானம், திடீர் போக்குவரத்து, வெளிநாட்டுத் தொடர்பு என்பன ஏற்பட்டுச் சிறப்படைவர். உயர் கல்வியால் சிறப்பான தொழில், பதவிகளை வகிப்பார்கள். பணம், பட்டம், பதவியால் இவர்களை ஏமாற்ற முடியாது. உலக மகா சக்தியான அன்பு ஒன்றுக்கு எதையும் தியாகம் செய்து விடுவர். இறந்ததின் பின்பும் புகழ் தொடர்ந்திருக்கும். ஜனவசீகரம் மிக்க எண் ஆகும். விளம்பரம் அதிகம் இருக்கும். பலரின் உதவிகளாலும் சிறப்படைவர். இவரும் பலருக்கும் எதிர்பாராமல் பல உதவிகளைச் செய்வர். வயதான காலத்தில் துறவிகளைப் போன்று வாழ்வு நடத்துவர். தெய்வீகப் பணிகளைச் செய்வார்கள்.

இந்த எண்கள் பெயரில் மாத்திரமல்ல. ஸ்தாபனத்தின் பெயரில் தொழிலிடத்தின் எண்ணுக அமைந்திருந்தாலும் மேற்கூறிய பலன்கள் நடக்க இடமுண்டு.

தொழிலிடத்து எண்கள்: 15, 24, 42, 60.
தொழிற்சாலை எண்கள்: 33, 39, 24.

அமைந்தால் இந்த எண்காரர்களுக்கு அதிக முன்னேற்றத்தைக் கொடுக்கும்.

## 6-ம் எண்ணைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களின் குணங்களும் பலன்களும்.

U — இலேசான மங்கல், சாம்பல், மஞ்சள், கலந்த நிறமாகும். எந்த விசயத்திலும் நிதானமான போக்குடையதாகும். படிப்படியான வளர்ச்சி ஏற்படும். ஆராய்ச்சித் துறையிலும், வியாபாரத் துறையிலும் சிறப்பை ஏற்படுத்தும் எழுத்தாகும். 3-ம் எண்ணில் பிறந்தவர்களுக்கு இந்த எழுத்து சிறப்பைத் தரும். ஆராய்வு, அனுபவம் எதிலும் அறியும் ஆற்றலை ஏற்படுத்தும். வெளி நாட்டுத் தொடர்பு, ஜனவசீகரம் என்பன வற்றை ஏற்படுத்தும் எழுத்தாகும். வியாபார ஸ்தானங்களுக்கு முதல் எழுத்தாக அமைக்கலாம். குடல் இரத்தம் சம்பந்தமான நோய்களும் இவர்களுக்கு ஏற்படும்.

V — பச்சை, பழுப்பு நிறமான எழுத்தாகும். சுயநலம் மிக்கவர்கள். சுறுசுறுப்பானவர்கள்; தனது குடும்பத்தினருக்காக பாடுபட்டு உழைப்பார்கள். எதிலும் ஆராய்ச்சி அறிவு உடையவர்கள். தெய்வ பக்தி, புரட்சி மனுேநிலை, உடையவர்கள். எப்படியும் பொருள் சம்பாதிப்பதில் தருணம் பார்த்திருப்பார்கள். அழகில் மயங்கி எதையும் செய்வார்கள். உயர் பதவிகளில் இவர்களது நண்பர்கள் இருப்பதால் பலர் இவரைக் கொண்டு அவர்களின் உதவியை நாடுவார்கள். எல்லோருக்கும் உதவி செய்வார்கள்.

W — கடும் பச்சை நிறமாகும். எவரையும் இலகுவில் கவர்ந்து விடுவர். மற்றவர்களைக் கணித்து அதற்கேற்பத் தனது நிலையை மாற்றி விடுவர். சந்தர்ப்பவாதிகள். வியாபாரம், அதிகாரம், பணம் படிப்படியாக உயர்நிலையை அடையச் செய்யும். வளர்ச்சி, உயர்ச்சி, பசுமை கலந்த வாழ்வு ஏற்படும். காதலால் - முறை தவறிக் காம சுகம் காண முற்பட்டு அவமானமடையச் செய்யும். அவதானமாக இருத்தல் வேண்டும்.

இந்த எழுத்துக்கள் ஒருவருடைய பெயரில் முதல் எழுத்தாக இருந்தால் அதிக தாக்கத்தையும் (உத்தமம்) பெயரின் இடையிலோ, நடுவிலோ இருந்தால் ஓரளவு மேற்சொன்ன பலன்களையும் (மத்திமம்) இறுதியில் இருந்தால் குறைந்த பலனையும் தரவல்லது. (வளரும்)

**முக்கிய குறிப்பு:**

"சோதிடமலரில்" வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

# ★ கிரகங்களின் அறுசுவைகள் ★

சூரியனுக்கு காரசாரமான உணவுப் பண்டங்களும் சூடான வஸ்துக்களும் பானங்களும் பிரதானமானவை. இரண்டாமிடத்தில் சூரியனையுடையவர்களும், கடகலக்கினத்தில் தோன்றியவர்களும் இப்பதார்த்தங்களில் பிரியமுடையவராயிருப்பர்.

சந்திரனுக்கு குளிர்ந்த பானங்களும், சூடேறிய பண்டங்களும் உவர்ப்பு அதிகமான வஸ்துக்களிலும் விருப்பமுண்டு. மேலும், இரண்டில் சந்திரனையுடையவர்களும் மிதுன லக்கினத்தில் ஜனித்தவர்களும் உப்பு அதிகமான பதார்த்தங்களையே அதிகமாக விரும்பியுண்பர்.

செவ்வாய் கசப்புச் சுவையையே விரும்பும் கிரகமாகும். இதனால் மீன துலா லக்கினகாரர்களும் செவ்வாயிரண்டாமிடத்தில் அமையப்பெற்றோரும் பாவற்காய், சுண்டைக்காய் போன்ற சமையல் பதார்த்தங்களையும் கோப்பி, தேநீர், பால் என்பவற்றை இனிப்புக் குறைவான நிலையிலும் விரும்பியுண்பர்.

புதன் மற்றைய கிரகங்களைப் போலல்லாது அறுசுவையிலும் பிரியமுடையவர். சிங்கலக்கினகாரரும் இரண்டாமிடத்தில் புதனமையப் பெற்றோரும் ஆறு சுவைகளிலும் விருப்பமுடையவராய் சிற்றுண்டி, அடிக்கடி ஏலக்காய், வெற்றிலை போன்ற வாசனைப் பொருட்களை மெல்லுபவராயுமிருப்பர்.

வியாழனுக்கு இனிப்பில் ஈடுபாடுண்டு. விருச்சிக கும்பலக்கினகாரரும் இரண்டாமிடத்தில் குரு அமைந்தவரும் எப்போதும் இனிப்புப் பண்டத்தில் அலாதி விருப்பமுடையவர். பழவகையும் பால், கோப்பி, தேநீர் முதலியவற்றில் அதிக இனிப்பும் இவருக்கு வேண்டும்.

சுக்கிரன் புளிப்பை விரும்புவார். மேட, கன்னி லக்கினகாரரும் சுக்கிரன் இரண்டாமிடத்தில் அமைந்தோரும் குழம்பு, ரசம், சாம்பார் போன்றவற்றிலும் மாங்காய், தோடை போன்ற புளிக் கனிவகைகளிலும் மிக்வும் விருப்பமுண்டு.

சனிக்கு துவர்ப்பு ருசியே பிரதானமானது. தனு மகரலக்கினத்தில் பிறந்தோரும் இரண்டாமிடத்தில் சனி அமையப்பெற்றோரும் அத்திக்காய், வாழைப்பூ, கீரை போன்றனவற்றிலும் பழவற்றல்களிலும் அதிக விருப்பமுடையவராயிருப்பர். மேலும் இவர் எந்நேரமும் வாயில் பாக்குத்தூள் போன்ற துவர்ப்புச் சுவையையே சுவைத்துக் கொண்டிருப்பர். — 'நந்தினி'

---

இம்மாதம் உங்க... (16-ம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயிகளுக்குப் பயிரழிவுகள் ஏற்படும். உற்பத்தி குறையும். விளைவுகளைச் சந்தைப் படுத்துதலிலும் சிரமங்கள் ஏற்படும். கடன் பளுவும் ஏறிக்கொண்டே போகும். கடன் பட்டு விவசாயம் செய்வதைக் கூடிய வரை தவிர்த்தால் அதிக நட்டம் வராமல் தப்பலாம்.

தொழிலாளருக்கு முதலாளிகளுடன் பிணக்குகள் அதிகரிக்கும். தொழில் வழக்குகளில் பாதகமான தீர்ப்புகள் வழங்கப்படும். வேலையில்லாப் பிரச்சினைகளும் தோன்றலாம். வருமானம் குறைவதால் கஷ்டங்கள் தோன்றும்,

மாணவர்களுக்குக் கல்வியில் அக்கறையின்மையும் ஊக்கக் குறைவும் ஏற்படும். பரீட்சையில் சித்தியடைவது கடினம். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமுள்ள நல்லுறவுகள் விரிவடையும். மாணவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடுவதினால் தண்டனைகளுக்குள்ளாக வேண்டியும் நேரும்.

பெண்களுக்கு முக்கியமாகக் கன்னிப் பெண்களுக்கு இந்த மாதம் ஒரு சோதனைக் காலமாக அமைந்தாலும் ஆச்சரியமில்லை. இவர்களின் காதல் விவகாரங்கள் முடிவுறாத அல்லது தோல்விகளையும் தழுவலாம். ஆடம்பரச் செயல்களால் சிலர் ஏமாற்றங்களைத் தழுவ நேரிடும். மர்மமான நோய்களால் சிலர் அவஸ்தைப்பட நேரிடும். எதிலும் பொறுமையும் - நிதானமும் இவர்களுக்கு உதவலாம்.

அதிஷ்ட நாட்கள்: அக் 18, 19, 26, 27, 31, நவ 1, 4 பி. ப, 5, 6, 9 பி. ப, 10, 11, 14, 15.

துரதிஷ்ட நாட்கள்: அக் 20, 21, 22 மு.ப, 24, 25, நவ 2, 3, 4.

# எண் சோதிடத்தில் எண் 8

— மு. மு. மார்க்கண்டு —

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

### 8-ம் திகதியில் பிறந்தவர்கள்

8 எண் நட்சத்திர ரீதியில் பரணி 4-ம் பாதத்தையும் நவாம்ச இராசி அடிப்படையில் விருச்சிகத்தையும் குறிக்கும். தனிய எட்டாம் திகதியில் பிறந்தவர்கள் சுக்கிரன் செவ்வாய் ஆகிய கிரகங்களின் இயக்கமுடன் வாழ்வார்கள். பரணி நட்சத்திரம் சுக்கிரனுக்குரிய நட்சத்திரம். அவர் நிற்கும் நட்சத்திர சாரத்தைப் பொறுத்துச் சில மாற்றம் ஏற்படும். பலன்கள் சிறு மாற்றம் அடையும். இருந்தும் வெள்ளியினுடைய பலன்களை அடைந்து வாழ்வார்கள். பிறக்கும்போது அவர் சாதகத்தில் வெள்ளி பலம் அடைந்திருந்தால் 8-ம் திகதி பிறந்தவர் மிகச் சிறப்புடன் வாழ்வர். அத் திசை புத்திகள் கூட அவருக்கு நற்பலன் தரும். சுக்கிரன் இன்பத்திற்கும், இன்ப உணர்ச்சிக்கும், மனப் போராட்டத்திற்கும் இதய மளிக்கக்கூடிய ஓர் நற்கிரகமாகும். குளிர்ந்த கிரகம். இதனாலேயே சுக்கிரனை மழைக்கோள் என்றும் சொல்வார்கள். கலைக்கதிபதியும் கலா ரசனைக் கிரகமும் சுக்கிரனேயாகும். கலையதிபர்களும், சித்திரம் வரைபவர்களும், சிற்பிகளும், அலங்காரத் துணி தயாரிப்போரும், சட்ட நுணுக்கம் தெரிந்த புகழ் மிக்க சட்டத்தரணிகளும், நீதிபதிகளும் இவ்வெண்ணில் பிறந்தவர்களாவர். கூட்டெண்ணைப் பொறுத்தும் சில மாற்றங்கள் ஏற்படும். பயிரிடும் நிலங்கள், படுக்கை அறைகள், அழகிய வீடுகள் என்பன சுக்கிரனுக்குரிய இடங்கள். தென்கிழக்குத் திக்கும் 8 எண்ணுக்குரிய திக்கு ஆகும். 8 எண்ணுக்குரிய இரத்தினம் வைரம். எட்டு எண்ணுக்குரிய நிறம் நீலம், வெளுப்பு. கிழமை வெள்ளி, செவ்வாய். மேற்குத் திக்கில் இருந்து வேலை செய்தாலும், கலரை அணிந்தாலும், இரத்தினத்தைப் பாவித்தாலும் அதிஷ்டசாலிகள் ஆகலாம். மகாலெட்சுமி குல தெய்வமாகும்.

### 17-ம் திகதி பிறந்தவர்கள்

இவ்வெண் மிருகசீரிடம் 4-ம் பாதத்தையும் நவாம்ச ராசி அடிப்படையில் சூரியனையும் குறிக்கும். நட்சத்திர ரீதியில் இவ்வெண்ணுக்குரிய கிரகம் செவ்வாயாகும். இவ்வெண்ணில் பிறந்தவர்கள் செவ்வாயின் தன்மையில் வாழ்வார்கள். இக்கிரகம் சிறியதாயிருப்பினும் கிரக சக்திகளில் அதிக வலிமை பெற்றிருக்கிறது. 17-ம் திகதியில் பிறந்தவர்கள் பிறக்கும்போது சாதகத்தில் செவ்வாய் வலிமை பெற்று நல்ல பாதசாரத்தில் இருந்தால் மிகப்பெரிய சாதனைகளைச் செய்து முடிப்பார்கள். உலகப் புகழ் பெறக்கூடிய அறிஞராகவும், விஞ்ஞானியாகவும், தத்துவ சாஸ்திர நிபுணராகவும் கலைஞர்களாகவும், அரசியல் ஈடுபாடு உடையவர்களாகவும் இருப்பார்கள். அரசியலில் பெரும் பதவியை வகிப்பார்கள், எந்நிலையில் வாழ்ந்த போதிலும் தமது திறமையால் பெரிய மனிதர்களுடனும் போட்டி போட்டுக் கொண்டு வெற்றி கண்டு பெரிய அந்தஸ்துடன் வாழ்வார்கள். கிரக சோதிடத்தில் செவ்வாயை இளம் பருவ முடையவனாகவும், சேனைத் தலைவனாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. 17-ம் திகதி பிறந்தவர்கள் தனது முதிய வயதிலும் எவ்வித அயர்வு ஓய்வு மின்றிச் சுறுசுறுப்பாகக் காணப்படுவார்கள். சிலர் கடுகடுப்பான பேச்சும் கோபமும் கொள்வார்கள். போராட்ட மூலமே இவர்கள் வாழ்வு வளம் பெறும். செவ்வாய் போர்க்கிரகமும் சேனைத் தலைவனும் ஆனபடியால் 17-ம் திகதி பிறந்தவர்கள் போராட்ட மூலமே அரும் பெரும் சாதனைகளை நிலைநாட்டுவார்கள். இவ்வெண்ணுக்குரிய கிரகமாகிய செவ்வாய் பலவீனப்பட்டால் அவர்கள் வாழ்க்கை துர் அதிஷ்டமானதாகவே அமையும். எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டே வாழ்வார். இவர்களுக்குரிய திக்கு தெற்காகும். அதிஷ்ட நிறம் சிவப்பு. கிழமை செவ்வாய், ஞாயிறு. தெய்வம் முருகன்.

## 26-ம் திகதி பிறந்தவர்கள்

நட்சத்திர ரீதியில் பார்க்கும்போது புனர் பூசம் 2-ம் பாதத்தைக் குறிக்கும். புனர்பூசம் 2-ம் பாதம் நவாம்ச ராசியில் இடப ராசியைக் குறிக்கும். 26-ம் திகதி பிறப்பவர்கள் பரம சுபக் கிரகமான வியாழபகவானைக் குறிக்கும். கிரக ரீதியில் வாழ்வார்கள். இவர்களுக்கு வெள்ளியின் இயக்கமும் உண்டு. இவர்கள் பிறக்கும்பொழுது குரு பகவான் நல்ல சாரத்தில் இருந்து பெருமை தந்தால் இவர்கள் மிக உன்னத மனிதர்களாக வாழ்வார்கள். இவர்களின் சாதகத்தில் வெள்ளியும் பெலம் பெற வேண்டும், குரு பெலம் பெற்ருல் ஞானம், கல்வி, பதவி, கௌரவம், புகழ் எல்லாம் ஏற்பட்டு வாழ்வார்கள். இவர்களுக்கு சோதிடத்தில் ஆர்வம் உண்டு. சிலர் அதைத் தொழிலாகவும் செய்வார்கள். அப்படிச் செய்யா விட்டாலும் அதில் சிறு ஆராய்ச்சியாவது இல்லாமல் இருக்காது. 26-ம் திகதியிற் பிறந்து சாதகத்தில் குரு, ராகு, கேது, சனி சேர்க்கையினுலோ பார்வையினுலோ சண்டாளக் குரு ஆகி விடும். 26-ம் திகதி பிறந்தவர்களுக்கு குரு பெலவீனப்பட்டால் வஞ்சகம், சூது, பொருமை, திருட்டு, முரட்டுச் சுபாவம், விபரீதமான எண்ணங்கள் ஏற்படும். மற்றவர்களால் ஒதுக்கப்பட்டு வாழ்வார்கள். குரு சுபக்கிரகமாகையால் தீய செயலுக்கு இணங்காவிடினும் சூழ்நிலை, சந்தர்ப்பமாவது அந் நிலையை உருவாக்கும். 25, 26, 27, 28 இத் திகதிகளில் பிறந்தவர்கள் நட்சத்திர ரீதியில் வியாழ பகவானைக் குறிக்கும். இவர்கள் சாதகத்தில் குரு பெலம் பெற்ருல் சிறந்த கல்விமான்களாகவும், பெருந் தலைவர்களாகவும் இருப்பார்கள். ஆனுல் 25-ம் திகதியில் பிறப்பவர் நவாம்ச ராசியில் மேடத்தையும் 26-ம் திகதி இடபத்தையும். 27-ம் திகதி மிதுனத்தையும், 28-ம் திகதி கடகத்தையும் குறிக்கும். 26-ம் திகதி பிறப்போரின் திக்கு இருப்பிடம் வடகிழக்கு மூலையும் (அதாவது ஈசான்யம்) பிரார்த்தனைக் கூடம், சட்ட மன்றங்கள், ஞான பீடங்கள் ஆகியன. இவர்களுக்குரிய இரத்தினம், புஷ்பராகம். புஷ்பராகம் அணியாவிட்டால் பவுண் மோதிரம் அணியலாம். மஞ்சள், பொன் நிறம் அதிஷ்டமானது, குரு பெலவீனப்பட்டு துர் அதிஷ்டமாக வாழ்பவர்கள் குருவின் பிரீதிக்காக ராமாயண பாராயணத்தையும், தெட்சணுமூர்த்தி தோத்திர பாராயணத்தையும் செய்துவர வேண்டும். நல்ல நிலையில் உள்ள கிரக சோதிட ஆராய்ச்சி நிபுணர்களிடம் நட்சத்திர நிலையில் பெயர் மாற்றம் செய்ய வேண்டும். வியாழ பகவானை, தெட்சணு மூர்த்தியை வழிபட வேண்டும். எந்த எண்ணில் பிறந்தாலும் நன்மை, தீமை உண்டு. இரண்டும் 8, 17, 26 திகதிகளில் பிறந்தால் அது துர் அதிஷ்ட நம்பர் என்று நினைப்பது சொல்வது மிகவும் தவறு. எனது அனுபவத்தின்படி எந்தத் திகதிகளில் பிறந்தாலும் அவர்கள் பிறக்கும் அத்திகதிகளுக்குரிய கிரகம் பெலம், பெலவீனத்தைப் பொறுத்து அதிஷ்டசாலியாகவும் துர் அதிஷ்டசாலியாகவும் வாழ்கிருர்கள். சிலர் 8 எண்ணில் பிறந்தால் எவ்வளவு அதிஷ்டசாலியாக இருந்தாலும் நிம்மதியுடன் வாழ முடியாது என்பார்கள். மற்ற எண்களில் பிறந்து அதிஷ்டசாலிகளாக வாழ்ந்தும் நிம்மதியாக வாழ்கிருர்களா? ஆகையால் 8 எண்ணை மாத்திரம் துர் அதிஷ்ட நம்பர் என்று விலக்குவது தவருகும். கூட்டு எண்ணே பிறப்பெண்ணே 8 ஆக அமைந்தவர்கள் எத்தனையோ பேர் அதிஷ்டசாலிகளாக வாழ்கிருர்கள்.

4-ம் திகதி பிறந்து கூட்டு எண் 35 ஆகவும் வந்து பெயர் எண் 37-ல் அமைந்த ஒருவர் எல்லோருக்கும் தெரிந்த வகையில் குறையில்லாமல் வாழ்கிருர். அவர் பிறந்த திகதி 4 அசுவினி 4ம் பாதத்தையும் அம்ச ராசி மகரத்தையும், பெயர் எண் 37 மகம் 1-ம் பாதத்தை பெயர் அம்ச ராசி மேடத்தையும் குறிக்கும். கேது, வருணன் தொடர்புடையவன். பிறப்பு கடக ராசிக்கு கூட்டெண் அதாவது விதிஎண் எட்டாம் இடத்தில் அமைகிறது. பாக்கிய ஸ்தானத்திற்கு 12-ம் இடம். பிரயாண மூலம் புகழ், பாக்கியம் கிடைத்தது. வெளிநாட்டுத் தொடர்பு மூலம் பாக்கியம் வருகிறது.

இன்னுமொருவர் 10 பிறப்பு கூட்டு 26-ல் பிறந்து இளம் வயதிலேயே அதிசயப்படும்படியாக ஹோட்டல் நடத்தி வருகிருர். அவரின் வியாபாரத்தலம் பெயர் 46-ல் அமைக்கப்பட்டிருக்கிறது. அவரின் பிறப்பு 10 சூரியனையும் கூட்டு 26 குருவையும் வியாபார எண் 46 சூரியனையும் குறிக்கிறது. இப்படி எத்தனையோ பேர்கள் 8 பிறப்பெண்ணுகவோ கூட்டு எண்ணுகவோ அமைந்து சிறப்புடன் வாழ்கிருர்கள்.

ஆகையால் 8 எண் துர் அதிஷ்டமான எண்ணென்றும் மற்ற எண்களை அதிஷ்டமானது என்றும் சொல்ல முடியாது. அவரவர்கள் பிறக்கும்

(24 பக்கம் பார்க்க)

# காதலில் வெற்றி உண்டா?

ஒருவருடைய பிறந்த ஜாதகத்தைக் கொண்டோ அல்லது பிரஸ்ன சோதிட மூலமோ அவர் தன் காதலில் வெற்றி பெற்று வாழ்வாரா என்று ஓர் அனுபவம் வாய்ந்த சோதிடரால் மிகத் துல்லியமாகச் சொல்ல முடியும்.

புத்திர ஸ்தானமாகிய 5-ம் பாவம் களத்திர பாவத்துக்கு 11-ம் பாவமாக லாபஸ்தானமான நிறைவேற்றல் தானமாகிறது. அதனுல் காதலில் வெற்றி பெற்று வாழ்வாரா என்பதை அறிய 5-ம் பாவத்தையே ஆராய வேண்டும்.

5-ம் வீட்டு ஆரம்ப முனையின் உப நட்சத்திராதிபதி அமர்ந்திருக்கும் நட்சத்திரத்தின் அதிபதி 7-ம், 11-ம் வீடுகளின் குறிகாட்டிகளாயிருந்தால் காதலில் வெற்றி பெறுவர். ஆனுல் அந்த அதிபதி 6ம் அல்லது 12ம் வீடுகளின் குறிகாட்டிகளாக இருந்தால் காதல் விவகாரங்கள் தோல்வி

**V. S. ஸ்ரீகந்தசாமி — தாளையடி**

தரும். மேற்படி உபநட்சத்திராதிபதி அமைந்த நட்சத்திரத்தின் அதிபதி 6-ம் வீட்டின் குறிகாட்டியாயின் கேள்வி கேட்டவர் ஆணுயிருந்தால் பெண் வீட்டாராலும், பெண்ணுயிருந்தால் ஆணுலும் கைவிடப்படுவர். 12-ம் வீட்டின் குறிகாட்டியாக இருந்தால் ஜாதகரே தன் காதலைக் கைவிட்டு விடுவர்.

ஐந்தாம் வீட்டு ஆரம்ப முனையின் உப நட்சத்திராதிபதி நின்ற நட்சத்திரத்தின் அதிபதி அல்லது 7-வது ஆரம்ப முனையின் உப நட்சத்திராதிபதி நின்ற ராசி நட்சத்திராதிபதி பின்வரும் ராசிகளில் இருந்தால் உண்டாகும் பலன்கள்.

மேடம்: நேர்மை, வைராக்கியம், வசீகரம், சுயேச்சை, சுதந்திரம், அனுபவசாலித்தனம், காதலில் அஞ்சா முயற்சி.

இடபம்: விசுவாசம், சுய கட்டுப்பாடு, உண்மை, அவசரம், எதிர்ப்பைச் சமாளிக்கும் திறமைசாலி.

மிதுனம்: அதிக மகிழ்ச்சி, விரைவில் நட்பு கொள்ளல், குற்றம் காணல், திருப்தியின்மை, பிறரை மயக்கும் தன்மை, புரிந்துகொள்ள முடியாதவர்.

கடகம்: சௌகரியங்களை உதறித் தள்ளல், கபடமில்லாமை, உண்மை நிலை, ஆனுல் நிலையற்ற மனம், காதல் இல்லையேல் வாழ்வே இல்லை.

சிங்கம்: கணவன் மனைவியரிடையே மகிழ்ச்சி பிறரைக் கவர்ச்சிப்படுத்தல், அதிக கோபமுமுண்டு காதல் சிதறுதல். கோபத்தை அடக்கினுல் ஆழ்ந்த காதல் உண்டாகும்.

கன்னி: குற்றமற்ற தன்மை, கூச்சம், யாரிடமும் குற்றம் கண்டு பிடித்தல், வேலையில் கவனம், ஒருவரைத் தேடிக்கொள்வதில் நீண்ட தாமதம்.

துலாம்: கபடமற்ற தன்மை, பேச்சிலிருந்தே மனதைக் கவருதல், எதிலும் திருப்தி, அதிக அன்பு, காதலில் நிபுணர்.

விருச்சிகம்: இரக்கக் குறைவு, உறுதியின்மை, பலவித குணேபாவம், துணைவியாரிடமிருந்து பாராட்டு எதிர்பார்த்தல், மனதுக்கு ஆறுதல் அளித்தால் வெற்றி அடைவர்.

தனுசு: விளையாட்டில் கவனம், சமூக சேவை துணைவருக்கு சுதந்திரமளித்தல், தைரியசாலி, குடும்ப வாழ்க்கை அவ்வளவு முக்கியமல்ல, திடீர் குணமாற்றமுடையவர்கள்.

மகரம்: மன எழுச்சி, எதிலும் எச்சரிக்கையுமாய் இருத்தல், துணிவு குறைவு, பிறரின் சம்மதத்துக்காக காத்திருப்பார்.

கும்பம்: எதற்கும் இடங் கொடுப்பார். இரக்கத் தன்மை, கற்றோரை விரும்புபவர், பற்றுதல் அதிகம்.

மீனம்: புத்திசாலி: சந்தேகத் தன்மை, அழகிய அலங்காரங்களை விரும்புபவர், அதிக கனவு காணல், தாமதத்தின் பின் வெற்றி.

ஒருவருடைய ஜாதகத்தில் பாபக் கிரகங்கள் 6, 8, 12ல் இருக்க அல்லது உப சயசத் தானங்கள் ஆகிய 3, 6, 10, 11-ம் பாவங்களில் இருக்க களத்திராதிபதி குடும்பத்தானுதிபதி (7-ம் 2-ம்) ஆகியோர் 1, 4, 5, 7, 9, 10-ம் இடங்களில் பலம் பொருந்தியிருக்கப் பிறந்தவர் அழியாத காதலர் ஆவர். மனதுக்காரகனுகிய சந்திரன், களத்திர காரகனுகிய சுக்கிரன், புத்திக் காரகனுகிய வியாழன் ஆகிய இவர்கள் சுபர்களாகி சுபாங்கிஷமேறி பலம் பொருந்தியிருந்தாலும் காதலில் வெற்றி பெற்று வாழ்வார்கள்.

# அன்னையைக் கண்டேன் - 29

"ஆனந்தபைரவி"

## ஐயங்கள் பல நல்கும் ஜயந்திநகர் மீனாக்ஷி

கிளிநொச்சிப் பகுதியில் 1945-ம் ஆண்டளவில், பிரதான வீதியருகிலும் இரணைமடுக் குளத்தருகிலும் ஆரம்பித்த குடியேற்றத் திட்டத்தைத் தொடர்ந்து அதைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் படிப்படியாகக் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பமாகின. இவற்றுள் ஒன்றுதான் ஏழாம் வாய்க்கால் என நீர்ப்பாசன, விவசாயப் பிரிவுப் பெயரால் அழைக்கப்படும் ஜெயந்திநகரி. இங்கு 1948-ம் ஆண்டளவில் மக்கள் குடியேறத் தொடங்கினர்.

இன்று இப்பகுதி மிகவும் வளர்ச்சியடைந்த பகுதியாகவும், கல்வி வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி இவற்றில் மேம்பட்ட மக்களையுடையதாயும் விளங்குகிறது. இப்பகுதி மக்களின் ஆன்மீக உணர்வினை வளர்க்கும் இடமாக அமைந்துள்ளது ஜயந்திநகர் மீனாக்ஷி அம்மன் கோவில்.

கிளிநொச்சி பஸ்நிலையத்திற்கருகில் செல்லும் பாதையொன்று திருநகரை ஊடறுத்துச் சென்று ஜயந்திநகருக்குள் பிரவேசிக்கிறது. இப்பாதையில் பிரதான வீதி (கண்டி வீதி) யிலிருந்து சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரம் சென்றதும் இடது புறம் நோக்கித் திரும்பினால் சற்றுத் தூரத்தில் மீனாக்ஷியம்மன் கோயிலைக் காணலாம்.

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள அம்மன்கோயில்களைப்பற்றி விசாரித்தறிந்து ஏற்கெனவே இரணைமடு கனகாம்பிகை அம்மன்கோயிலுக்குச் சென்று வந்த பிறகு நீண்டநாட்களின் பின் ஜயந்திநகர் மீனாக்ஷியம்மனின் அழைப்புக் கிட்டியது. அம்பிகையை நாடி நாம் சென்றபோது அலங்கார உற்சவத்திற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. மீண்டும் உற்சவ வேளையின்போது மறுபடியும் அவளைத் தரிசிக்கும் பேறு கிட்டியது.

சுற்றுமதில் மணிக்கோபுரம் இவற்றோடும் ஐந்து மண்டபங்களோடும் காட்சிதருமாலயத்தை வலம் வந்தபோது விநாயகர், சிவலிங்கப்பெருமான், பாலசுப்பிரமணியர், ஆகியோர் வரிசையாக கிழக்கு முகமாக, நிருதி, வருணன், வாயு திக்குகளில் அமர்ந்து அருள்வழங்கக் கண்டோம். வாயு திக்கில் தெற்கு முகமாக சனீஸ்வரனும். தனியே அமர்ந்து காட்சிதருகிறார். நந்தியும் பலிபீடமும் ஸ்தம்ப மண்டபத்தில் காணப்படுகின்றன. மணிக்கோபுரத்தருகில் பைரவர் சந்நிதானமும் உண்டு.

மூலஸ்தானத்தை நாடுகிறோம். மனோன்மணி அம்பிகை அருள்முகம் பூக்க அபயம் காட்டி, வரதம் தந்து அழகுருவமாக நிற்கிறாள். வசந்தமண்டபம் அமைக்கும்வேலை நடந்துகொண்டிருக்கிறது.

ஆலய வரலாற்றினை உசாவுகின்றோம். அநேக செய்திகள் கிடைக்கின்றன.

1948 இல் அரசாங்கத்தால் குடியேற்றப்பட்ட மக்கள் இப்பகுதியில் தமக்கொரு இந்துக்கோயில் அமைக்கப்பட வேண்டுமென்ற அவாவுடன் இருந்தனர். இணுவிலைச் சேர்ந்தவரும், கந்தர்மடம் வேதாந்த மடத்தில் மகாதேவா சுவாமிகளின் மாணவராயிருந்தவருமான வடிவேலு சுவாமியார் கிளிநொச்சி குருகுல ஸ்தாபக நிர்வாகி கதிரவேலு ஆசிரியர் மற்றும் கிளிநொச்சி திருநெறிக்கழகச் செயலாளராயிருந்த நல்லதம்பி ஆகியோரும் குடியேற்ற வாசிகளும் சேர்ந்து அரசாங்கத்திற்கு விண்ணப்பித்து மூன்று ஏக்கர் காணியை ஆலயத்திற்காகப் பெற்றுக்கொண்டனர்.

அங்கே ஒரு வீரை மரத்தின் கீழ் ஒரு சிறு கொட்டில் போட்டு சூலமொன்றை நாட்டினர். அந்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டிய மூர்த்தம் எது என்பதைத் திருவுளச் சீட்டுமூலம் தீர்மானித்தனர். மீனாக்ஷி அம்பிகை அங்கு அருள் பாலிக்கத் திருவுளங் கொண்டாள். ஒரு மீனாக்ஷி அம்பிகை படமும் அங்கு வைக்கப்பட்டது. செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் யாவரும் இங்கு கூடி விளக்கேற்றி - பொங்கலிட்டுப் பிரார்த்தனை செய்து வந்தனர்.

இணுவிலைச் சேர்ந்த நல்லம்மா என்ற வீர சைவ மரபுப் பெண்மணி ஒருவரும் இங்கு குடியேறியிருந்தார். இவரையே ஆலயத்தில் விளக்கு

வைக்கும் பணிக்கு மக்கள் தெரிந்தெடுத்தனர். 1955-ம் ஆண்டளவில் ஆரம்பித்த இப்பணியை இவர் தொடர்ந்துசெய்து வந்தார். ஊரவர் யாவரும் இவரைக் கோயிலாச்சி என்றே அழைக்கலாயினர்.

கோயிலருகில் ஓலைக்குடிலில் திருஞானசம்பந்தர் மடமும் அமைக்கப்பட்டு குருபூசை அன்னதானம் முதலியனவும் நடந்து வந்தன.

இதன்பின் ஊரார் யாவரதும் பக்தி விசுவாசம், அயராத உழைப்பு, முயற்சி இவற்றினால் 1968-ம் ஆண்டளவில் உறுதியான ஆலயத்திற்கு நிலம்வகுத்து அஸ்திவாரம் இடப்பட்டது. 1972-ம் ஆண்டில் கோயில் கட்டடம் கட்டப்படலாயிற்று. 1974-ம் ஆண்டு பங்குனி உத்தரத் திருநாளில் பண்டிதர் இ. நவரத்தினக் குருக்கள் அவர்களால் நூதன மஹா கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. மீனாக்ஷி அம்பிகை சிலை விக்ரகமாக மனோன்மணி வடிவில் மூலஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டார். தொடர்ந்து ஆலயத்தின் விசேஷ உற்சவங்களை பண்டிதரவர்களே நடத்திவருகிறார்.

1972-ம் ஆண்டிலிருந்தே ஊரவர்களுடன் சேர்ந்து பெருமுயற்சி செய்து கோயிலை உருவாக்கியவரும் நல்லம்மாவின் தம்பியாருமாகிய க. சோமசுந்தர ஐயரே இப்போதும் தொடர்ந்து அம்பிகையின் நித்ய பூஜைகளை நடத்திவருகிறார்.

கும்பாபிஷேகத்தையடுத்து ஆலயபரிபாலனத்திற்காக நிர்வாகசபை ஒன்று நிறுவப்பட்டது. 1982ல் சுற்றுமதில், பரிவார சந்நிதானங்கள் என்பன அமைக்கப்பட்டன.

நவராத்திரி, திருவெம்பாவை, சித்திரா பௌர்ணமி, வருஷப்பிறப்பு முதலிய விசேஷ உற்சவங்களும் ஆடிப்பூரத்தை இறுதியாகக் கொண்டு பத்து நாட்கள் அலங்கார உற்சவமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மீனாக்ஷி அம்பிகையின் கருணை கடாக்ஷத்தை அனுபவித்தபடி அடுத்த ஆலயத்தை நோக்கிப் புறப்படுகிறோம்.

கணித சுத்தமுடையது

திருக்கணித பஞ்சாங்கம்

## விருச்சிக லக்ன ஆணும் இடப லக்கினப் பெண்ணும் சேர்வதால் ஏற்படும் பலாபலன்கள்

வே. சின்னத்துரை - நல்லூர்

விருச்சிக ஆணுக்கு உலகம் மிகக் கொடூரமானதென்று தோற்றும். அவ நம்பிக்கையுள்ள நட்பில்லாத உலகமென்று தனக்குத்தானே எண்ணுவார். ஏனெனில் உண்மை, விசுவாசம் என்பவற்றில் அவருக்கு மிகுந்த அக்கறையுண்டு. சுய முன்னேற்றம் அவருக்கு ஓர் செலுத்தும் விசையாகும். அவர் செய்யும் எக்கருமத்திலும் தான் திறமையாய் இருக்க எண்ணுவார். இதை இடபக்காரி ஆமோதிக்கமாட்டார். அவள் அவரை அடக்க முயன்றால் அவர் நிந்திப்பார். பொறுமை கொள்வார். உடைமையுள்ளவராவார். சிலநேரம் கொடூரமாயுமிருப்பார். இக் குணாதிசயங்கள் அவரால் உண்டாக்கப்பட்டவையே. ஆகையால் நியாயமான ஒரு நாடகத்தை எதிர்நோக்கலாம். ஒருவர்க்கொருவர் காட்டும் உணர்வுகள் ஆளமாக விருப்பின் இந்த முரண்பாடுகளைச் சமாளிப்பார்கள். அத்துடன் தினசரி சண்டையில் சுகிப்பார்கள். இடபக்காரிக்கு நிறைந்த உத்வேகமும் கலவரமும் வேண்டுமென்றால் இவன் தான் அதற்குரியவன்.

பாலியல்பில் இருவருக்கும் ஏற்கெனவே ஒழுங்குபடுத்தின எண்ணங்கள் இருக்கும். ஆதலால் இருவரும் அடிமட்டத்தில் உணர்ச்சி வசப்பட்டாலும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க எண்ணமுண்டாதம். இருவரும் உணவிலும் குடியிலும் கூடுதலாக ஈடுபட நேரின் பஞ்சத்தில் எதிர்மாறான நிகழ்வுகளை உண்டாக்கும்.

ஒரு சுலபமாய் முறியக்கூடிய கூட்டுறவு.

எண் சோதிடத்தில்... (21-ம் பக்கம் பார்க்க)

அவ்வெண்ணுக்குரிய கிரகம் சாதகத்தில் எந்த நிலையில் உளதோ அதன்படி துர் அதிஷ்டமாகவும் அதிஷ்டமாகவும் வாழ்வார்கள். எவ்வெண்ணில் பிறந்தாலும் இந்நிலை உண்டு. இதைச் சோதிட அறிவாளிகள் உணர்ந்து செயல்படவேண்டும். பெயர் மாற்றும் பொழுதும் விவாகப் பொருத்தம் பார்க்கும் பொழுதும் இந்நிலையை அனுசரித்து செயற்பட்டால் நன்மையுண்டு. நட்சத்திர ரீதியில் எண் இயக்கம் பலன் தருகிறது என்பது வெளிப்படையாகும். இந்நிலையை எண் சோதிடர்கள் அனுசரித்து மக்களுக்கு வாழ வழி காட்டலாம் எனத் திடமாகக் கூறுகிறேன்.

# இலங்கையின் வருங்காலம் எப்படி?

வே. தெய்வநாயகம், துறைநீலாவணை.

சந்: துந்துபி விருஷ மார்கழி மாத சோதிட மலரில் கடிகாரமின்றி நேரம் நிதல் என்ற விளக்கத்தின்படி அளந்த அடி 65. ஆனல் இரண்டால் பெருக்க 130, 11 ஐக் கூட்ட 141, 84 ஐப் பிரித்தல் எவ்வாறு? அடுத்ததாக 19-4-84-ல் நான் பிற்பகலில் அடி அளந்தபோது 1 அடி. 1×2+11=13. 84÷13=6 மணி 28 நிமிடம். இதை 6 மணியிலிருந்து கழித்தல் எவ்வாறு? நான் அடி அளந்தபோது சரியான நேரம் என்ன?

நிவி: காலையில் 65 அடி தூரத்தில் நின்று கொண்டு சரியான இலக்கைப் பிடித்துக்கொண்டு அடி அளப்பது கடினம். பிழையேற்பட நேரிடும். எல்லாக் காலங்களிலும் பிரிக்கப்படும் எண் 84 ஆக அல்லது 83, 87 ஆக வித்தியாசப்படும் எனக் கூறப்பட்டிருப்பதையும் கவனிக்க. பிற்பகலில் அடி அளந்தபோது 1 அடி என்றல் ஒரு பக்கத்திலும் நிழல் விழவில்லை என்பது அர்த்தமாகும். அப்போது சூரியன் சரியாக உச்சியில் நிற்கும். மாலை 6 மணியிலிருந்து 6 மணி 28 நிமிடத்தைக் கழித்தால் பகல் 11 மணி 32 நிமி. வருமென அறிக.

பொ. துரைசுவாமி, தையிட்டி.

சந்: இலங்கை வருங்காலத்தில் தனி இராச்சியமாக விளங்குமா? அல்லது இரண்டு அல்லது

## சந்தேக நிவிர்த்தி 'மகம்'

இரண்டிற்கு மேற்பட்ட இராச்சியங்களாக அமையுமா? சோதிட ரீதியில் இலங்கையில் தமிழருக்கு அரசுரிமை கிட்டும் காலம் எப்போது என்பதை விளக்குக.

வ. சிறில், காங்கேசன்துறை.

சந்: இலங்கைத் தமிழரைக் குறிக்கும் கிரகம் புதன் என்று குறிப்பிடுகின்றீர்கள். எக்காலம் முதல் தமிழரைக் குறிக்கின்றது? 1956 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த இனக் கலவரங்கள் நடைபெறவில்லையே. புதன் நாட்டை ஆளும் காலம் உண்டா? அல்லது இலங்கையில் தமிழரே இல்லாத காலம் என்று ஒன்று உண்டா?

நிவி: மேற்கேட்கப்பட்ட இரண்டு சந்தேகங்களுக்கும் நேரான பதில்கள் தரக்கூடிய அளவுக்கு நாம் தராதரம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எனினும் கிரகசாரப்படி பொதுவான ஆராய்ச்சி வருமாறு: இந்தியப் பிரபல சோதிடர் B. V. இராமன் இலங்கைக்குரிய ராசி கும்பம் என்று குறிப்பிட்டிருக்கிறர். அனேக சிங்கள சோதிடர் வெவ்வேறு பிரிவினர் இலங்கை இராசி கன்னி என்றும், சிங்கம் என்றும், கும்பம் என்றும் பலவாருகச் சொல்லப்படுகின்றது. இவை ஆராய்ச்சிக்குரியன. நாம் சரித்திரத்துக்குட்பட்ட ஆராய்ச்சியில் இறங்குவோம்.

இலங்கை அந்நியர் ஆட்சியிலிருந்து சிங்கள ஆட்சிக்குக் கைமாறியது 4-2-1948 நடுநிசி நேரம் துலா லக்கினத்தில் (விருச்சிக ராசியில்). துலா ராசிக்கு ஏழாம் இராசி மேடம். அரசாங்கத்தை நேரடியாக எதிர்ப்பவர்களின் இராசியாகக் கொள்ள வேண்டும். ஏழாம் இராசி எதிர்நின்று துணை செய்பவர்களையும் குறிக்கும். மேடராசியே தமிழர்களை இன்று குறிக்கின்றது. இந்த இராசிக்கு எட்டாம் இராசியில் சனி, ராகு 1956-ல் சஞ்சரிக்கும்போது தமிழர்களின் சுதந்திரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டது. இதன் பின்னர் காலத்திற்குக் காலம் மேட இராசியோ விருச்சிக ராசியோ தாக்கப்படும்போதெல்லாம் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 1970-ம் ஆண்டு சனி மேடராசியில் நீசமாகச் சஞ்சரித்தபோது தமிழர்களின் இடம் பாராளுமன்றத்தில் இருந்தும் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டது. 1971 ஆம் ஆண்டு துலா லக்கினத்திற்கு அட்டமத்தில் சனி சஞ்சரித்தபோது அரசாங்கத்திற்குப் புரட்சிவாத இளைஞர்களால் ஏற்பட்ட தாக்கம் தெரிந்ததே! 1982-10-6 முதல் சனி துலா ராசியில் பிரவேசித்தது முதல் அரசாங்கத்திற்கு தில்லு முல்லுப் பாதையாக இருக்கின்றது. இச் சனி தமிழர்களைக் குறிக்கும் மேட ராசிக்கு மாரகம் ஆகிய எதிர் ராசியில் சஞ்சரிக்கின்றது. எனவே தமிழர்களுக்கு இன்னல்களும், மாரகமும் நடந்துகொண்டு இருக்கிறது. 1985 ஜனவரியில் சனியும், கேதுவும் விருச்சிக ராசியில் சங்கமமாகின்றன. இது மேடத்திற்கு 8-ம் இராசி. துலாமுக்கு 2-ம் இராசி. கேது கர்மக் கிரகம். எல்லாக் கர்மங்களுக்கும்

ஈடு கொடுக்கும் காலமாக அமையலாம். நோய்க்கு மருந்து போன்றவர் கேது. நோய் போன்றவர் சனி. இவர்களின் கூட்டு ஒரு தீர்க்க முடியாத நோய்க்கு கடைசி நோய் தீர்க்கும் மருந்தாக அமையலாம். *1985* ஜனவரிக்கு மேல் ஒரு தீர்க்க மான முடிவு உண்டாகலாம். எனினும் சனி விருச்சிக ராசியில் சஞ்சரிக்கும் வரை தமிழர்கட்கு தற்போதைய கஷ்டங்கள் இல்லாவிடினும் சமுதாயச் சிரமங்கள் இருக்கத்தான் செய்யும். *1986* இன் மேல் சுபீட்சம் உண்டு.

திருமதி சு. தம்பையா, சித்தங்கேணி.

சந்: *31-10-1957* மாலை *6-43*க்குப் பிறந்த பெண்ணின் கிரகநிலையையும், செவ்வாய், புதன் அஸ்தமனமடைந்துள்ளதா என்பதையும் அறியத் தருக.

நிவி: உதயலக்கினம்-இடபம்; நட்சத்திரம்—திருவோணம் 2-ம் பாதம்; சந்திரராசி - மகரம்; மேடத்தில்-கேது; கன்னியில்-குரு; துலாத்தில்-சூரியன், புதன், செவ்வாய், ராகு; விருச்சிகத்தில்-சனி; தனுவில்-சுக்கிரன்; மகரத்தில் - சந்திரன், செவ்வாயும், புதனும் அஸ்தமனமடைந்துள்ளன.

க. சுப்பிரமணியம், திருகோணமலை.

சந்; ஒருவருக்கு என்ன தொழில் கிடைக்கும் என்பதை எப்படி நிர்ணயிப்பது?

நிவி. தொழிலைப் பொறுத்தளவில் இரண்டு விதம் உண்டு. ஒன்று தன் சொந்தத் தொழிலை அதிகாரத்துடன் செய்வது. மற்றையது இன்னொருவருக்குக் கீழேயோ அல்லது ஒரு கொம்பனி அல்லது அரசாங்கத்திற்குக் கீழேயோ பணி புரிவது. சொந்தத் தொழிலை 10-ம் இடமும், பணியாள் தொழிலை 6-ம் இடமும் குறிக்கின்றது. ஒருவர் சொந்தத் தொழிலை அல்லது பணியாள் தொழிலை செய்வாரா என்பதை 6ம், 10-ம் வீடுகளில் எந்த வீடு பலமாக உள்ளது என்பதைக் கொண்டே சொல்ல வேண்டும். 6-ம் 10-ம் வீடுகளில் இருக்கும் அல்லது அவற்றின் ஆட்சிக்கிரகங்கள் மூலம் தொழிலின் லட்சணத்தை அறிந்துகொள்ள வேண்டும். சூரியன் - வைத்தியம், அரசியல், அதிகாரத்துவம் தொடர்பான தொழிலையும், சந்திரன் - கடல், மனோசாத்திரம், பெண்களுக்குரிய சாதனங்களுடன் சம்பந்தமான தொழிலையும், செவ்வாய் - ஆயுதங்களுடன் சம்பந்தப்பட்ட தொழில், சீருடை அணிந்து புரியும் தொழில், கமம் என்பனவற்றையும், புதன் - போக்குவரத்துச் சாதனங்கள், தொலைபேசி, தட்டெழுத்து, கணிதம், வர்த்தகம், கணக்காளர் முதலிய தொழில்களையும்; குரு - ஆசிரியர், நீதி, சட்ட வல்லுனர், போஷகர், பூசாரி, முதலாளி, பொக்கிஷாதிபதி ஆகிய தொழில்களையும்; வெள்ளி - அழகு சாதனங்கள், பாலுணர்வு சாதனங்கள், நடனம், நாட்டியம், சங்கீதம் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட தொழில்களையும்; சனி - சேவகம், பூமியுடன் தொடர்பான வேலை, சுரங்கத் தொழில், அடிமைகளின், தாக்கப்பட்டோரின் நலன்களுக்காகப் பாடுபடும் தொழிலையும்; இராகு - தூதுவத் தொழில், ஏஜன்சி வேலை, சூது, சுத்துமாத்துத் தொழில்கள், ஏவு தொழில்கள், சட்டத்தரணித் தொழில், தரகுத்தொழில், முதலியவற்றையும்; கேது - பாரம்பரிய மூலிகை வைத்தியம், மாந்திரீகம், ஆவி தொடர்பான தொழில்களையும் குறிக்கின்றன. யுரேனஸ்—எலக்ரோனிக் தொடர்பைக் கொடுக்கும். நெப்டியூன் மனோசாத்திர ரீதியான தொடர்பையும், புளுட்டோ - பழையன அழிந்து புதியன உருவாக்கும் தொடர்புகளையும் தரும்.

செல்வி. உதயலதா பத்மநாதன், மட்டுவில்.

சந்: ஆய்வுமன்றப் பகுதியில் எனது கிரகநிலையில் சனி (7-ம் வீட்டில்) மேடத்தில் இடம் பெற வேண்டுமெனக் கூறப்பட்டிருந்தது. எனது குறிப்புப்படி சனி 6-ம் இடம். பின்வரும் விபரப்படி சரியான கிரகநிலையைத் தருக. *20-7-1968* பிற்பகல் *1* மணி *05* நிமிடத்தில் பிறந்தேன்.

நிவி: உதயலக்கினம்-துலாம்; நட்சத்திரம்-கார்த்திகை 3-ம் பாதம்; மீனத்தில் - இராகு; மேடத்தில்-சனி; மிதுனத்தில் - குஜன், புதன்; கடகத்தில்-சூரியன், சுக்கிரன்; சிங்கத்தில்-குரு; கன்னியில்-கேது; இடபத்தில்-சந்திரன், இதுவே சரியான கிரகநிலை.

---

குறிப்பு:- சந்தேகங்களை கேட்பவர்கள் போஸ்ட்காட்டில் மட்டும் சொந்த விலாசத்துடன் எழுதிக் குறிப்பிட்ட விலாசத்தை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும். ஒரு போஸ்காட்டில் ஒரு கேள்வி மட்டும் கேட்கலாம்.

''சந்தேக நிவிர்த்தி'' சோதிடமலர்
திருக்கணித நிலையம்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி

# எண் சோதிட முரண்பாடுகள்

— எண்சோதிடர். இ. மகாதேவா அவர்கள் —

சோதிடமலர் 16-8-1984 இல் '' எண் சோதிடத்தில் முரண்பாடுகள் '' என்ற கட்டுரையை அன்பர் திரு. வே. தெய்வநாயகம் அவர்கள் எழுதியிருந்தார். அவர் அப் பகுதியில் கேட்ட வினாக்களுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கை வானொலி ஒலிபரப்பில் 1982-ம் ஆண்டு தொடர்ந்து 4½ மாதமாக ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 6-15 மணியில் இருந்து 6-30 மணி வரை 'அதிஷ்ட எண் ஞானம்' என்ற தலைப்பில் எனது வானொலிப் பேச்சு இடம் பெற்றது. இந்நிகழ்ச்சியில் இடம்பெற்ற விடயங்களை ஒருமுறை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

1 மனித அறிவின் மட்டுப்படுத்தப்பட்ட தன்மையும், அதற்கப்பாற்பட்ட பேரறிவு இருத்தலும்.

2. பிரபஞ்ச உலகில் மீளமைவுத் தன்மையும் கால ஓட்டத்தின் மீளமைவுத் தன்மையும்.

3. மேற்கண்ட தத்துவ அடிப்படையில் கிரகங்களை ஆராய்வது மூலம் மனிதனைப் பற்றி அறிய முடிதல்.

4. கிரகங்களின் உயிர்ப்புச் சக்திகளும் அதனால் மனித உயிர்ப்புச் சக்தியை வழி நடாத்தப்படுதலும்.

5. கிரக மண்டல இயக்கமும், அதனால் இரவு பகல் பருவகாலம் உண்டாகி உயிர் உலகம் இயங்குதலும்.

6. எண்களின் கணித நுட்பங்களும் அவை குறிக்கும் தத்துவங்களும்.

7. எண்களின் இருவகைப்பட்ட பிரயோகங்களும் - அதன்படி கிரகங்களின் வரிசைக்கிரம எண்களும் — ஆதிக்க எண்களும்.

8. தனி மனிதனின் ஆதிக்க எண்களும் அதில் பெயரெண்ணின் சிறப்பும்.

9. ஒலிச்சக்தியின் வலிமையும் பெயரெண்ணால் மனிதன் பாதிக்கப்படுதலும்.

10. ரேடியோ மிகச் சரியாக ரியூன் பண்ண வேண்டியது போல் பெயரெண்ணையும் மிகப் பொருத்தமாகச் சரி செய்வதன் அவசியம்.

11. பெயர் அமைப்பும் பெயர் மாற்றமும்— வயது ரீதியான பாகுபாடும்.

12. பெயர் மாற்றத்தின்போது மிகக் கவனமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்.

13. பெயர் எண்களாக வரக்கூடிய எண்களும் வரக்கூடாத எண்களும்.

14. பெயரை மாற்றியோ பயிற்சிக்கும் முறையும் — பயிற்சிக்கும் குறிப்பிட்டவரின் ஒழுக்கங்களும்.

இவ்விசயங்களை இங்கு குறிப்பிடுவது ஏனெனில் அதிஷ்ட எண் ஞானம் — எவ்வளவு ஆழமாக ஆராச்சியுடையது என்பதை விளக்கவேயாகும்; இக் கருத்துக்கள் அடங்கிய வானொலிப் பேச்சு மிக விரைவில் புத்தகமாக வெளிவர முயற்சிகள் எடுக்கப்படுகின்றது. தொடர் 10-ல் ஒலிச்சக்தியைப் பற்றி விரிவு படுத்தும் வகையில் எல்லா மொழிகளுக்கும் சக்தி உண்டு. சத்தி ஒலியதிர்வின் அடிப்படையிலானதே தவிர மொழியடிப்படையிலானதல்ல. என்ன ஒலியதிர்வுகள் பாவனையில் உள்ளனவோ அவற்றிற்கே சக்தி ஆதிகம். நாம் எந்த மொழியில் பெயரைப் பாவித்து வருகிறோமோ கையெழுத்திட்டு வருகிறோமோ அந்த மொழி எழுத்துக்களுக்குரிய பெறுமதி எண்களைக் கொண்டு பெயரெண்ணைக் கணிக்க வேண்டும்.

இன்று வழக்கில் இருந்துவரும் எண்சோதிடக் கலையில் எகிப்திய திக்திகளையும், ஆங்கில எழுத்துக்களையும், தான் நாங்கள் கையாண்டு வருகின்றோம். நம்முடைய தாய் மொழியான (தமிழ்) தொடர்பில்லாத வேற்று மொழியைத் திகதியை அடிப்படையாகக் கொண்ட எண்சோதிடக் கலையை ஏற்றுக் கொள்வதில் சிலர் தயக்கம் காட்டவோ, விசனப்படவோ இடமுண்டு. இதற்கு நாம் கொடுக்கும் விளக்கம் இதுதான். ஆங்கில எழுத்துக்களுக்கும், திகதிகளுக்கும் உள்ள வலிமையும் சக்தியும் தமிழ் எழுத்துக்களுக்கோ அல்லது நட்சத்திரங்களுக்கோ இல்லை என்று நான் ஒருபோதும் கூறமாட்டேன். எனது தாய்மொழியாம் தமிழ் மொழியில் எண்களை ஆராய்வதில் ஈடுபட்டுள்ளேன். இலக்கண அறிஞர்கள் ஒலிய

சைவுகளை விளக்கும் ஆற்றலுள்ளவர்கள். புராதன ஆராய்ச்சியாளர்கள் எனக்கு உதவுவார்களாயின் தாய் மொழியில் ஒரு சரித்திரம் படைக்க முடியும். காலத்தின் நியதியால் மாற்ற முடியாத தன்மை ஏற்பட வேண்டும். ஆங்கில எழுத்துக்களுக்கு உரிய எண்கள் அபரிதமான விளைவுகளை ஏற்படுத்த வல்லன. எனது அனுபவத்தில் 16 வயதிலிருந்து பலவித மாற்றம்—செயற்பாடுகளை செய்துள்ளேன். எனது சொந்த வாழ்விலேயும் பரீட்சித்துப் பார்த்துள்ளேன். ஆங்கில எழுத்துக்கள் உயிர்ச்செறிவான தன்மை கொண்ட படைப்பாகும். அவ்வாறு தமிழ் மொழிக்குரிய எண்களை நிர்ணயிக்க வேண்டும். காலத்தின் நியதியால் எவராலும் மாற்ற முடியாத நிலை ஏற்படுத்த வேண்டும். அந்நிலை வரும்பொழுது வெளிவிடுவேன். எனது ஆராய்ச்சியும், மக்களுக்கு நான் சொல்லும், எழுதும் எழுத்துக்களும் கொள்கைகளும் பலமுறை பரீட்சித்துப் பலன் பெற்ற பின்பே இறுதி முடிவாக வெளியிடுகின்றேன். எனது உறுதியான நிலைப்பாட்டிலேயே இறைவனின் துணையுடன் உங்களுக்கு ஆலோசனை கூறும் வழிகாட்டியாக உள்ளேன். இதன் அடிப்படையில் எனது அதிஷ்ட எண் ஞானத்தில்

| எண் | எழுத்து |
|---|---|
| 1 | A, I, J, Q, Y |
| 2 | B, K, R |
| 3 | C, G, L, S |
| 4 | D, M, T |
| 5 | E, N, X, H |
| 6 | U, V, W |
| 7 | O, Z |
| 8 | F, P |

லத்தின் எழுத்துக்களிலிருந்து, எழுத்துக்களுக்கு எண்ணலைகளை நிர்ணயித்துள்ளார்கள். ஆங்கில எழுத்துக்கள் லத்தின் எழுத்துக்களில் இருந்து தொடுக்கப்பட்டுள்ளது. ஓசை இயல்புகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. உலகத்தில் சக்திச்-செறிவு அடங்கியது. தமிழ்மொழி ஒலி அசைவுகளுக்கு ஏற்ப சொற்கள் அமைந்துள்ளது. ஒலியசைவு, தாளமாக, கால அளவுப்படி - ஓசை வெளிப்படுத்தப் படுகின்றது. தெய்வீகத்துடன் இயக்கம் அமைந்துள்ளது. நடராசப் பெருமானின் நடனத்தில் ஓசை, ஒலி ஒளித் தத்துவம், தெய்வீகம் இரண்டறக் கலந்துள்ளது.

ஸ்வரத்தில் - 7, கலை - 64; அம்ஸம் - 108 தமிழ்மொழியில் எண்கள் உண்டு, பெறுமதிகள் உண்டு, கால அளவுகள் உள்ளது. எண்கள் - எழுத்துக்கள்- கிரகங்களுக்குள் ஒற்றுமை இருத்தல் வேண்டும். எண்களுக்கும் எழுத்துக்களுக்கும் இடையிலுள்ள தொடர்புகள் ஒலியதிர்வில் கால அளவில் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

தமிழ் அறிவாளிகள், பெரியோர்கள், சவால் விடுவோர்கள் யாராக இருந்தாலும், எவரிடமிருந்தும் எவ்வழி நல்வழி அவ்வழி நம்வழி"யாக இருக்கட்டும். எவரிடமிருந்தும் உயிரான உண்மைக் கருத்தை நாம் ஏற்க வேண்டும். காலத்தால் எவராலும் மாற்றப்படக் கூடாது. எம் பெருமானால் கட்டிக் காக்கப்பட்டு, முருகப் பெருமானல் வழி நடாத்தப்பட்டு முச்சங்கம் அமைத்து தற்காலம் அறிஞர்களால் வளர்க்கப்படும் எமது தெய்வீகத் தமிழ்மொழி காலத்தால் மாற்றப்படாத ஒலியதிர்வுகளைக் கொண்டது என உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது தாய் மொழியில் நாம் கொண்ட அபிமானத்தால் உணர்ச்சி வசப்பட்ட வசனங்களினால் எம்மை எவரும் கோழைகளாகவோ - சமாதானப் படுத்திக் கொள்ள முயலக்கூடாது. உண்மைக்கு நாம் மதிப்புக் கொடுக்க வேண்டும்.

உதாரணமாக எழுத்துக்களும்-கருத்துக்களும் சொற்களின் பிரயோகங்களையும் பாருங்கள். கடவுள் நம்மைக் காப்பவர். கடவுள் எமது காவலன். ஜீவராசிகளை கடவுள் காவல் காக்கின்றார்.

G O D உயிர்களின் காவலன்
3 7 4 — 14 — 5.

D O G காவல் காப்பது நாய்.
4 7 3 — 14 — 5.

சொற்களின் பிரயோகத்தையும், கருத்தையும், அதன் தன்மையையும் அவதானிக்கவும். நமது தமிழ் மொழியிலும் இவ்வாறு கருத்தாளம் மிக்க பல சொற்கள் உண்டு.

சிவம் — சவம்

உடல் (சவம்) இவ்வுடல் உயிருடன் இருக்கும் பொழுது ஆத்மா (உயிர்) வில் சிவம் கலந்துள்ளது. இறைத்தன்மை கலந்து அநாதியாகியுள்ளது.

பணம் — பிணம்

மனித வாழ்க்கைக்கு பணம் எவ்வளவு முக்கியமானது.

1-ம் உதாரணத்தில் ச என்ற எழுத்து சி ஆக வர உள்ள விசிறியின் மாற்றம் ஒலி அசைவில் கருத்தில் எவ்வளவு தாக்கம் கொண்டது. அதே

போன்று உ-ம் உதாரணத்தில் பணம் — பிணம் ப வுக்கு மேலுள்ள விசிறியினுல் ஒலி மாற்றம்— கருத்து எவ்வளவு தாக்கம் கொண்டுள்ளது. இவ்வாறு நாம் எவ்வளவு நுண்ணிய கருத்தாளங்களை அவதானிக்க வேண்டியுள்ளது. கண்டபடி மாற்ற முடியாது.

எவரும் உணர்ச்சி வசப்பட்டோ, மற்றவர்களுக்காகவோ, தர்க்க ரீதியாகவோ, புகழுக்காகவோ சோதிட சாஸ்திரத்தை — அதிஷ்ட எண் ஞானத்திலேயோ அடிப்படை மாற்றம் செய்ய முற்படக்கூடாது. அவதானமாகக் கருத்துக்களை வெளியிட வேண்டும். அவ்வாறு உண்மைக்கு மாருக எவரும் செய்ய முற்படும்பொழுது எமது ஆணித்தரமான எதிர்ப்புக்கள் இருக்கும். எவரின் ஆராய்ச்சி உண்மையானதாக, கருத்தாழமாக, உயிர்ச்செறிவானதாக இருக்குமாயின் எனது ஆதரவு, வரவேற்பு எப்பொழுதும் அவர்களுக்கு இருக்கும். எமது காலத்தின் பின்பும் வருங்கால உலகம் புரட்சிகர மாற்றங்கள் கொண்டதாகவோ அடிப்படை மாற்றங்களில் பல விரிவாக்கங்களை கொண்டிருக்கும். எமக்குப் பின்பு வருபவர்களும் எமது ஆராய்ச்சிகளின் உள்ளார்ந்த தத்துவ- உண்மை நடைமுறைகளை அறிந்து — உணர்ந்து உலகை வழிகாட்டும் ஆன்றோராக இருத்தல் வேண்டும். தெய்வீகம் எமது அதிஷ்ட எண் ஞானத்தில் கலந்திருக்க வேண்டும்.

சோதிட மலரில் வரும் எனது கட்டுரைகள்— கருத்துக்கள் மிக அவதானமாகவே எழுதப்படுகின்றது. அதே போன்று சோதிடமலரில் வரும் ஏனையோரின் கட்டுரைகளின் உண்மைகளையும்— கருத்துக்களையும் அவதானித்தே வருகின்றேன். ஒருவர் தவறு விடுகின்றார் என்று எடுத்த எடுப்பிலேயே நாம் சொல்லி விடுவது அழகல்ல. ஆனல் சந்தர்ப்பம் வரும்பொழுது, மக்கள் பிழையாக வழி நடத்தப்படுகின்றார்கள் என உணரும் பொழுதெல்லாம் எனது குரலும் ஒலிக்கவே செய்யும். எமது சமயம் — சாஸ்திரமும் சுதந்திரமானவை. எவருக்கும் பொதுச்சொத்து. பலரும் பல கருத்துக்களைச் சொல்லலாம், எழுதலாம். ஆனல் மக்கள் உண்மையை உணர்ந்து வரவேற்பது, அவ்வாறு சோதிட ஆலோசனைகளை வழங்கும் உண்மையான சோதிடர்களை நாடி ஆலோசனை பெறுவது மக்களின் சுதந்திரமாகும்.

(தொடரும்)

# ஆய்வு மன்றம்

K. சாந்தா, மகாகுடுகலே, ஹல்ஹநேயா.

குடும்பத்தானத்தில் சூரியன் சம்பந்தப்பட்டுச் சுக்கிரன் இருப்பதும் விவாக விஷயத்தில் சிக்கல்களைத் தோற்றுவிக்கலாம். பக்தியுடன் துர்க்காதேவியை வழிபட்டுவரின் விரைவில் விவாகசித்தி ஏற்படலாம்.

திருமதி M. அல்போன்சா, 197/10 ஸ்ரீகதிரேசன் தெரு.

உமது விண்ணப்பப் படிவத்தில் கிரகநிலையுடன், தென் இந்தியாவில் எந்த மாவட்டத்தில், எந்தப் பட்டணத்தில் (கிராமத்தில்) பிறந்தீர் என்பதும் குறிப்பிடாமல் பிரச்சினைகளை ஆய்வு மன்றம் ஆராயமுடியாதே.

சுப்பிரமணியம் வைரமுத்து,
காட்டுப்புலம், தொண்டைமாறு.

அட்டமாதிபனின் திருஷ்டிபெற்று அட்டமத்தில் இருந்த இராகுவின் தசையில், தசாநாதனுகிய இராகுவுக்கு 6ல், 6-ம் அதிபன் சேர்க்கை பெற்று இருந்த சுக்கிரன் புத்தியில் சுபபலன்களை எதிர்பார்க்க முடியாதே!

சு. ஜெய்முருகன், இல.60 மத்தியவீதி, மத்துகம.

இலக்கினம் சுபர் சேர்க்கை திருஷ்டி பெருமையும், இலக்கினுதிபன் செவ்வாய் திருஷ்டி பெற்றுச் சத்துருத்தானத்தில் இருப்பதும் உமது தற்போதைய நிலைமைகளுக்குக் காரணமாகலாம். பக்தியுடன் தெய்வ வழிபாடும், நவக்கிரக பிரீதியும் செய்துவருவதால் வேலை நிரந்தரமாகலாம்.

க. மு. கனகசபை,
நல்லாதோலை, வதிரி, கரவெட்டி.

போக்குவரவுப் பகுதி, அல்லது கல்விப்பகுதி, கணக்குப்பகுதி ஆதியனவற்றுடன் தொடர்புள்ள தொழில் செய்வார் எனக்கோள்கள் கூறுகின்றன.

சிவலிங்கமூர்த்தி வக்ஸ்சலா,
231 சட்டநாத வீதி, நல்லூர் வடக்கு.

தற்காலம் பிரதான கிரகங்களின் கோசாரம் சாதகமாக அமையாவிட்டாலும், 'வேயுறுதோழி பங்கன் ...' வழிபாடு உமது உள்ளத்தில் நிலைத்தால், வெகுவிரைவில் உமது கவலைகள் நீங்குவது திண்ணம்.

இ. அ. மன்னூர்:

விண்ணப்பப் படிவத்தில் கிரகநிலை முதலியவைகளையும் பூரணப்படுத்தாமல் விளக்கம் தர முடியாதே!

செ. மேகலா, கோட்டைக்கல்லாறு 2, கல்லாறு:

முயன்றுல் நடப்பு வருடத்திலும் வெளிநாடு செல்லச் சந்தர்ப்பமும் உண்டாகும்.

க. சிதம்பரநாதன்,
61, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

A. செவ்வாய் தசை - புத்தி - அந்தர காலங்களில் நீசபங்க இராசயோக பலன் உண்டாகும்.

B. "சகடயோக சாதகம்" திருமணத்திலும் சிக்கல்களை உண்டாக்கலாம் தானே!

C. கன்னிராசியில் புதன் மூலத்திரிகோணவலிமை என்று கூறினும், வக்கிரகதியில் அஸ்தமனமாகிப் பெலமிழந்துவிட்டாரே!

செ. உமாராணி, 300 மெயின் வீதி, மாத்தளை.

முயற்சி செய்யின் நடப்பு சுக்கிரன் திசை-குரு புத்தியில் வெளிநாடுசெல்லச் சந்தர்ப்பங்கள் உண்டாகலாம்.

செல்வி திருமலர், வன்னேரிக்குளம்:

உமது சாதகத்தின் கிரகநிலையின்படி திருமண விஷயத்தில் தடைதாமதங்களும் சிக்கல்களுமுண்டாக இடமுண்டு.

செல்வி பொ. சிவகாமி, இலக்குமி பதி, சங்கானை.

சுக்கிரன் சனி இவர்கள் முறையே இலக்கினம் பத்தாம் அதிபர்களாகிப் பரிவர்த்தனம் 'மகாயோகம்' எனப்படும். (புதன் மகரராசியில் இருப்பதால் குருவுடன் பரிவர்த்தனம்பெறவில்லை.) பலதீபிகையில் மகா யோகம் பலவகைச் சிறப்புக்களையும் கொடுக்கும் எனக்கூறப்பட்டுள்ளது.

V.K.M. தர்மலிங்கம், வைரவர் கோவிலடி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

உமது சாதகத்தின் கிரகநிலையில் கும்பத்தில் புதன் 5 லும் வக்கிரகதியில் மிதுனத்தில் குரு 9 லுமாகத் திருத்தப் படவேண்டும். பக்தியுடன் நவக்கிரக பிரீதிசெய்து, செய்வனவற்றைச்செய்து வரின் சந்திரதசையில் நினைவுகள் நிறைவுபெறும்.

குறிப்பு:- ஆய்வு மன்றப் பகுதிக்கு விண்ணப்பம் செய்வோர் பிறந்த திகதி நேரம் (மணி. நிமி) இரவு பகல் முதலியவற்றை விளக்கமாகக் குறிப்பிட வேண்டும். உங்கள் கஷ்டங்கள் பிரச்சினைகளைத் தெளிவாகத் தனியாக எழுதி இப்படிவத்துடன் இணைத்து 'சோதிடமலர்' ஆய்வு மன்றம், திருக்கணித நிலையம், மட்டுவில், சாவகச்சேரி. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவம் இணைக்கப்படாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்த ஒழுங்கின்படியே பதிலளிக்கப்படும். ஒரு விண்ணப்பத்தில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

## விண்ணப்பப் படிவம்

பெயர்: ....................................................


விலாசம்: ....................................................

பிறந்த திகதி: ஆங்கிலம் ....................................

தமிழ் ....................................

,, நேரம்: ....................................

,, இடம்: ....................................




ஜனனகாலம்.................. தசை இருப்பு

வரு.........மா.........நாள்.........

..................................
கையொப்பம்

## இலங்கைச் சோதிட ஆய்வு மன்றம்

மேற்படி மன்றத்தின் புரட்டாதி மாதக் கூட்டம் 30-9-84ல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாலை 3-15 மணியளவில் திரு. இ. கந்தையாவின் தலைமையில் ஆரம்பமாயிற்று.

சென்ற கூட்ட அறிக்கை காரியதரிசியால் வாசிக்கப்பட்டு திருத்தம் செய்யப்பெற்று தலைவர் கைச்சாத்திட்டார். பொருளாளரால் பொருள றிக்கை வாசிக்கப்பட்டு சரியென ஏற்று தலைவர் கைச்சாத்திட்டார். பின்பு பிரதம பேச்சாளரான திரு. செ. இராசேந்திரன் கைரேகையும் சோதிடமும் என்னும் விடயம் பற்றிப் பேசினர். சோதிடத்தில் இலகுவாக பலன் சொல்வதுபோல் கை ரேகை சாத்திரத்தில் சொல்வது எளிதல்லவென்ருர். பாமிஸ்ரி என்றல் உள்ளங்கையின் மர்மம் என்று பொருள்படும். ரேகைகளை மாத்திரம் கொண்டு பலன் கூறிவிட முடியாது. கையின் தன்மை, மொழிகளின் அமைப்பு, விரல், நகங்களின் தன்மை, தோலின் தன்மை, புறங்கையின் தன்மை, முதலியனவும் அதை விட வேறு கையில் தோன்றும் குறியீடுகளும் கொண்டு மிக நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்துத்தான் பலன் கூறமுடியும். மேடுகளின் தன்மைக்கு அமைவாகத் தான் ஒருவருக்கு கிரகங்களும் அமையும் என்ருர். பின்பு திருவாளர் வே. சின்னத்துரை தனக்கு அழிக்கப்பட்ட பட்டத்தை மீளப் பெறுமாறு கேட்டுக்கொண்டார். இதை சபை ஏற்றுக்கொண்டது. மன்றத்தின் அமைப்பு விதிகள் வாசிக்கப் பட்டது.

பின்பு மாலை 5 மணியளவில் கூட்டம் இனிது நிறைவேறியது.

### குருவும், சூரியனும் கூடினுல்............

குருவும் சூரியனும் ஜாதகத்தில் ஒன்றுகூடி ஒரு கேந்திரம் அல்லது கோணத்தில் இருந்தால் நலம் உண்டாகும். இவ்விருவரும் தனுவிலோ சிங்கத்திலோ கூடியிருந்தால் அல்லது ஒருவர் வீட்டில் மற்றவராகப் பரிவர்த்தனை பெற்றிருந்தால் சுபபலன்களைத் தருவார்கள். ஒருவரை யொருவர் பார்த்தாலும் யோக பலன்கள் கிட்டும். உச்சம் பெற்றிருந்தால் கூடுதலான நற்பலன்கள் ஜாதகரைத் தேடிவரும்.

## அஞ்சலி

### வே. சுப்பிரமணியன் செட்டியார்

"சாமுத்திரிகாலக்ஷண சாஸ்திரம் பழங்கதையாய் கனவாய் மெல்லென மறைந்துபோகாமல் காப்பது சாஸ்திர விற்பன்னர்களின் கடமையாகும். அது சனுதன தர்மத்திற்குச்செய்யும் தொண்டாகும்." இவ்வாறு ஐந்தாவது ஆண்டுமலரில் (சோதிடமலரில்) அங்கலக்ஷண அனுமானங்கள் எனும் கட்டுரையில் தமது விருப்பத்தை அன்று ஆவலுடன் வெளியிட்ட யாழ்ப்பாணம் - நீராவியடி, வே. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் இன்று எம்மிடமிருந்து பிரிந்துவிட்டார். வண்ணார்பண்ணை கடைச்சாமி வீதியிலமைந்த ஸ்ரீநடேசர் ஆலயத்தை வம்சாவழியாகக் காப்பாற்றி வந்த செட்டியார் அவர்கள் இவ்வாலயத்தின் முன்னேற்றமும் இந்துமத வளர்ச்சியும் காரணமாக, குருமார்பயிற்சிக்கலாசாலையை நடாத்தி வரும் சிவானந்த குருகுலத்திற்கு ஸ்திரமான நிலை கருதி ஓர் காணியையும் ஆலயத்தினருகில் அன்பளிப்பாகக் கொடுத்துதவியுள்ளார். மேற்படி குருகுலத்துடன் தொடர்புடைய எம்முடன் நெருங்கிப் பழகிய இப்பெரியாரின் மறைவு தாங்கமுடியாத மனக்கவலையைத் தருகின்றது. தமிழ், ஆங்கிலம், சோதிடம், யோகாசனப்பயிற்சி ஆகியவற்றிலெல்லாம் போதிய பாண்டித்தியம் பெற்று இலங்கையின் அமெரிக்க தூதுவராலயத்தில் பல ஆண்டுகளாக செய்தித்துறை அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றபின், தமது மனைவி மக்களுடன் முதுமைக் காலத்தைக் கழிக்கும்பொருட்டு கடந்தமாதம் மீண்டும் அமெரிக்கா சென்று சுகவீனம் காரணமாகத் திடீரென இவ்வுலகைவிட்டு நீங்கிவிட்டார். அவரின் அன்பு மனைவி மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதல் வார்த்தையையும் தெரிவிப்பதுடன் அவர் என்றும் போற்றி வழிபட்டு வந்த குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும் குமிண் சிரிப்பும் கொண்ட ஸ்ரீநடேசப்பெருமானின் திருவடிநீழலிலே அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக! (ஆ—ர்)

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 30

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்
2. 1-11-1984க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றுவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 30
சோதிடமலர்
மட்டுவில் — சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | ச 9 | ■ | 11 | 12 |
| 13 | ■ | 15 | 16 | தை 17 | ■ |
| 19 | 20 | த 21 | 22 | ■ | 24 |
| ■ | 26 | 27 | அ 28 | 29 | க் 30 |
| 31 | ம 32 | 33 | ■ | 35 | 36 |

பெயர் ..........................................................

விலாசம் ..........................................................

..........................................................

**இடமிருந்து வலம்**

1. ஐப்பசி மாத அபரபக்ஷ சதுர்த்தசியிலன்று வரும் ஒரு விசேட தினம்.
7. குழம்பியுள்ள இச்சொல் '4' ஐக் குறிக்கும்.
11. குறித்த காலம் அல்லது 'பொழுது' எனலாம்.
15. புராதன காலத்தில் மன்னர் அருகே இருந்த துறைமுகம் குழம்பியுள்ளது.
19. உபவாசமிருந்து இறைவனைத் தியானிப்பதை இவ்வாறு கூறுவர்.
26. மேட ராசியில் உச்சம் பெறும் இவரை இப்படியும் அழைப்பர். குழம்பியுள்ளது.
31. தமிழகத்திலுள்ள நகரம் குழம்பியுள்ளது.
35. கிரகங்கள் இவ்வேறுபாட்டின் காரணமாகவே முன்னேக்கி அல்லது பின்னேக்கி செல்வதாக தோற்றமளிக்கின்றன.

**மேலிருந்து கீழ்**

1. திதியொன்று மறைந்திருக்கிறது.
2. இது தன்னைத் தான் சுற்றுவதினுலேயே இரவும் பகலும் ஏற்படுகின்றது.
3. சித்திரை, வைகாசி மாதங்கள் சேர்ந்த இளவேனிற் காலத்தை இது குறிக்கும்.
6. இடப ராசியினைக் குறிக்கும் உருவமிது.
11. மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகியன ஒன்றுக்கொன்று இப்பொருத்தம் அற்றவை.
16. குழந்தையின் முதல் வார்த்தை தலைகீழாக மாறியுள்ளது.
20. சனி ஆட்சி பெறும் வீடு கடை எழுத்து நீங்கி தலைகீழாகிவிட்டது.
24. 'திசை' தலைகீழாகத் தெரிகிறது.
29. தலைகீழான இதனிறுதியில் ஒரெழுத்தைச் சேர்க்க வருமிராசிக்கு புதன் அதிபதி.

**குறுக்கெழுத்துப் போட்டி 29-ன் விடைகள்**

இடமிருந்து வலம்:

1. ஆதிபத்யம் 7. சௌமிய 11. கல்(வி)
13. சங்கமம் 19. கிரகம் 26. பிலவங்க
31. (மே)டம் 34. தாயம்

மேலிருந்து கீழ்:

1. ஆசௌசம் 2. திமிங்கிலம் 3. பங்கயம்
5. கயல் 6. (ம)கம் 16. மகரம் 24. வயது
29. பிதா

**பரிசு பெறுவோர்**

1-ம்பரிசு: க. மகேந்திரன்,
மே/பா க. கந்தப்பெருமாள்,
மாங்காடு - குருக்கள் மடம்.

2-ம் பரிசு: எஸ். எம். நடராஜா,
குறுமுனி வீதி, மட்டுவில் தெற்கு.

3-ம் பரிசு: சு. கிருபாகரன்,
பரமன் சனசமூக நிலையம்,
ஆரையம்பதி - 1, காத்தான்குடி.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.

அபிவிருத்திப் பாதையில்,..........

யாழ்ப்பாணத்து நீர்வளம் குளங்களில் தங்கியுள்ளது.

காலந்தோறும் குளங்களை ஆழமாக்குவோம்

குளங்களில் அதிகளவு நீரைத் தேக்குவோம்

குளத்துநீர் பெருக்கால் கிணற்று நீரைப் பெருக்குவோம்

யாழ்ப்பாணத்து மூலவளம் பனைவளம் என்போம்

பனையை அதிகமாக வளர்த்துப் பயன் பல பெறுவோம்

வீதியோரங்களில் நிழல்மரம் நடுவோம்

வீட்டுத் தேவைக்கு எலுமிச்சை, தோடை நடுவோம்

விறகுத் தேவைக்கு சவுக்குமரம் உண்டாக்குவோம்

தென்னந்தும்பு பனந்தும்பு பயன்தர வழி செய்வோம்.

★ குளம் தோண்டல் ★ மரம் நடுதல் ★ பனை அபிவிருத்தி

என்பனவற்றிற்கு மில்க்வைற் தொழிலகம் உதவும்.

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை சேகரித்து கொடுத்து பரிசுகளைப் பெறவும்.

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொவருரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா ரூ | 40-80 |
| | வெளிநாட்டுக்கு | (கப்பல்வழி) | வருட சந்தா ,, | 78-00 |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா ,, | 150-00 |
| | இங்கிலாந்து | (விமான வழி) | வருட சந்தா ,, | 175-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-40 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 230